
மனித உரிமைகளுக்கான

# குழந்தைகளின் குரல்




The Hindu 1st April 2010

மனித உரிமைகளுக்கான குழந்தைகளின் குரல் - 59 - 2011

**Focus**

# 1.21 கோடி மக்கள்தொகை நாட்டில் சிறுமிகள் எண்ணிக்கை குறைவு

**முதலில் ஒரு கெட்ட செய்தி: 6 வயதுக்குக் கீழ்ப்பட்ட குழந்தைகளின் பாலின விகிதம் 1,000 ஆண்களுக்கு 914 பெண்கள் என குறைந்துள்ளது – நாட்டின் விடுதலைக்குப் பின் இது மோசமான விகிதமாகும்; நல்ல செய்தி: மக்கள்தொகை வளர்ச்சி வேகம் குறைந்துள்ளது.**

இந்தியாவின் மக்கள்தொகை கடந்த பத்தாண்டு காலத்தில் பிரேசில் நாட்டு மக்கள்தொகைக்கு ஈடாக 17.64 சதவீதம் அதிகரித்து, 2011ல் 121 கோடிக்கு மேல் என்ற எண்ணிக்கையைத் தொட்டிருக்கிறது. இது, அமெரிக்கா, இந்தோனேசியா, பிரேசில், பாகிஸ்தான், பங்களாதேஷ், ஜப்பான் ஆகிய நாடுகளின் மொத்த மக்கள்தொகைக்கு இணையான எண்ணிக்கை. மார்ச் 31 அன்று வெளியிடப்பட்ட இந்திய மக்கள்தொகை கணக்கெடுப்பின் இடைக்கால உத்தேச அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ஒரு ஆறுதலான தகவல், விடுதலைக்குப் பின் ஒவ்வொரு பத்தாண்டாகக் கணக்கிட்டால், 2001 முதல் 2011 வரையிலான இந்தப் பத்தாண்டு காலத்தில் இந்திய மக்கள்தொகை வளர்ச்சி விகிதத்தில் கூர்மையான சரிவு ஏற்பட்டிருக்கிறது. அப்போது 21.54 சதவீதமாக இருந்தது இப்போது 17.64 சதவீதமாகக் குறைந்திருக்கிறது. முந்தைய பத்தாண்டு கால மக்கள்தொகை வளர்ச்சியை விடவும் குறைந்த அளவிலேயே மக்கள் எண்ணிக்கை சேர்ந்த ஒரே காலகட்டம் 2001–2011 பத்தாண்டுகள்தான். இதற்கு முன் இவ்வாறு சுதந்திரத்துக்கு முன் 1911–1921 காலகட்டத்தில் நடந்திருக்கிறது.

இந்தியாவின் எழுத்தறிவும் 9.21 சதவீதம் என்ற பாய்ச்சல் வேகத்தில் அதிகரித்திருக்கிறது. 2001ல் 64.83 சதவீதமாக இருந்த எழுத்தறிவு பெற்றவர்கள் விகிதம், 2011ல் 74.04 சதவீதமாக உயர்ந்திருக்கிறது. பெண்களிடையே எழுத்தறிவு வளர்ச்சி ஆண்களை விடவும் அதிகமாக 49.1 சதவீதமாக இருக்கிறது. ஆண்களில் எழுத்தறிவு வளர்ச்சி விகிதம் 31.98 சதவீதம். ஒட்டுமொத்தத்தில் எழுத்தறிவு வளர்ச்சி 38.82 சதவீதம்.

கவலையளிக்கும் அறிகுறி என்னவெனில், விடுதலைக்குப் பிறகு குழந்தைகளின் பாலின விகிதம் என்பது மிகக்குறைவாகியிருக்கிறது என்பதுதான். மக்கள்தொகை ஆணையர் சி. சந்திரமவுலி இதைப் பற்றிக் குறிப்பிடுகையில் ‘‘இது ஆழ்ந்த கவலைக்குரிய விசயம்,’’ என்று கூறினார்.

கருக்கொலை, சிசுக்கொலை ஆகிய கொடூரங்களிலிருந்து பெண்குழந்தைகளைப் பாதுகாப்பதற்காக ஏராளமான விழிப்புணர்வு இயக்கங்கள் நடந்துள்ளன. பல திட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. இருந்தபோதிலும், 0 முதல் 6 வயது வரையிலான குழந்தைகளிடைய பாலின விகிதம் என்பது 2001ல் 1,000 ஆண்குழந்தைகளுக்கு 927 பெண்குழந்தைகள் என்று இருந்தது, 2011ல் 914 ஆக வீழ்ச்சியடைந்துவிட்டது.

இதற்கு நேர்மாறாக, பெரியவர்களைப் பொறுத்தவரையில் பாலின விகிதத்தில் 1,000 ஆண்களுக்கு 940 பெண்கள் என முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. 2001ல் இது 933ஆக இருந்தது. சரியான எண்ணிக்கையில் சொல்வது என்றால், இன்று ஆண்களின் எண்ணிக்கை 62.37 கோடி அல்லது 51.54 சதவீதம். பெண்களின் எண்ணிக்கை 58.64 கோடி.

1971க்குப் பிறகு பதிவான மிக அதிகமான பாலின விகிதம் இது. 29 மாநிலங்களிலும் யூனியன் பிரதேசங்களிலும் பாலின விகிதம் அதிகரித்திருக்கிறது. பீகார், குஜராத், ஜம்மு–காஷ்மீர் ஆகிய மூன்று பெரிய மாநிலங்களில் பாலின விகிதம், 2001ம் ஆண்டின் மக்கள்தொகை கணக்கெடுப்புடன் ஒப்பிடுகையில் குறைந்துள்ளது.

மிக அதிகமான பாலின விகிதம் உள்ள மாநிலம் கேரளம் – 1,000 ஆண்களுக்கு அங்கே 1,084 பெண்கள் இருக்கிறார்கள். அதற்கடுத்து பாலின விகிதம் அதிகமாக இருப்பது புதுச்சேரி. அங்கே இந்த விகிதம் 1038 ஆக இருக்கிறது. மிகக் குறைவான பாலின விகிதம் கொண்டது டாமன் டையு. அங்கே இந்த விகிதம் 618.

மாநிலங்களில் அதிக எண்ணிக்கையில் மக்களைக் கொண்டிருப்பது என்ற பெயர் மறுபடியும் உத்தரபிரதேச மாநிலத்திற்கே போகிறது. அங்கே 19.9 கோடி மக்கள் இருக்கிறார்கள். குறைவான மக்கள் தொகை இருப்பது லட்சத்தீவு – 64,429 பேர்.

**தமிழ்நாடு மக்கள்தொகை இப்போது 1.21 கோடி 2001 கணக்கிலிருந்து 15.6 சதவீதம் அதிகரிப்பு**

தமிழ்நாட்டில் 3,61,58,871 ஆண்களும் 3,59,80,087 பெண்களுமாக மொத்தம் 7,21,38,958 மக்கள்தொகை இருப்பதாக உத்தேச அறிக்கை கூறுகிறது. 2001 கணக்கெடுப்புக்கும் 2011 கணக்கெடுப்புக்கும் இடையே 15.6 சதவீதம் அதிகரித்திருக்கிறது. 2001ல் இந்த மாநிலத்தின் மக்கள்தொகை 6,24,05,679 ஆக இருந்தது. மாநிலத்தின் பாலின விகிதம் 1,000 ஆண்களுக்கு 995 பெண்கள்; குழந்தைகளிடையே இந்த விகிதம் 1,000 ஆண்குழந்தைகளுக்கு 946 பெண்குழந்தைகள் என உள்ளது. இது தேசிய விகிதத்தை விட 30 புள்ளிகள் அதிகம். 0–6 வயதுப்பிரிவில் மொத்த மக்கள்தொகை 68,94,821 என பதிவாகியுள்ளது. தமிழ்நாட்டில் எழுத்தறிவு பெற்ற பெண்களின் விகிதாச்சாரம் ஆண்களை விடக் குறைவாக 73.86 சதவீதமாக உள்ளது; ஆண்களில் எழுத்தறிவு பெற்றவர்கள் 86.81 சதவீதம்.

# கருவிலேயே முளைவிட்ட இலைகள்

இருக்கிற வள ஆதாரங்களை வைத்து நடத்துகிற போராட்டத்திலேயே நாட்டின் மக்கள்தொகை அதிகரித்துவந்திருக்கிறது என்பது உங்களுக்கு ஏற்கெனவே தெரிந்திருக்கிறது. தோள்களைக் குலுக்கிக்கொள்கிறீர்கள். இன்று நாம் உணவூட்டியாக வேண்டிய வயிறுகள் அதிகமாகிவிட்டன = 121 கோடிப்பேருக்கு உணவளித்தாக வேண்டுமே...

## ஒவ்வொரு அங்குலத்திற்கும் போட்டியாய்

- உத்திர பிரதேசம், மஹாராஷ்டிரா இரு மாநிலங்களின் மக்கள் தொகையைச் சேர்த்துப்பார்த்தால் **அமெரிக்க மக்கள் தொகையை விட அதிகம்.**
- **அதிக மக்கள் தொகை கொண்ட முதல் 5 மாநிலங்கள்:** உத்திர பிரதேசம், மஹாராஷ்டிரா, பீகார், மேற்கு வங்கம், ஆந்திர பிரதேசம்.
- **மிகக்குறைவான மக்கள் தொகை கொண்ட 5 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள்:** லட்சத்தீவு, டாமன்–டையு, தாதர் – நாகர் ஹவேலி, அந்தமான் நிக்கோபார் தீவுகள், சிக்கிம்.

## முண்டியடிக்கிற போட்டி

- ஒவ்வொரு சதுர கிலோ மீட்டருக்கும் மக்கள் தொகை அடர்த்தியில் முந்தியிருக்கும் 2 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள்: தேசத் தலைநகர்ப் பிரதேசமான தில்லி: **11,297,** சண்டிகார்: **9,252**
- மிகக்குறைவான அடர்த்தியுள்ள மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள்: அருணாசல பிரதேசம் 17, அந்தமான் நிக்கோபார் 46
- மாவட்டவாரியாக: முதலிடம் பிடித்த இரண்டு மாவட்டங்கள்: வட கிழக்கு தில்லி **37,346** சென்னை **26,903,** கடைசியில் உள்ள இரண்டு மாவட்டங்கள்: அருணாசல பிரதேசம் 1, சாம்பா (ஜம்மு காஷ்மீர்) 2

## எழுத்தறிவு அதிகரிப்பு

- ஏழு வயதுக்கு மேற்பட்ட எழுத்தறிவு பெற்றோர் மொத்த மக்கள் தொகையில் 74 சதவீதம் பேர்
- 2001ல் இது 64.83 சதவீதமாக இருந்தது
- எழுத்தறிவு பெறாதவர்கள் மொத்த எண்ணிக்கை 3,11,96,847. இவர்களில் பெண்கள் அதிகம். ஆண்களில் எழுத்தறிவு பெறாதோர் 1,40,74,650 பேர். பெண்களில் இவர்களது எண்ணிக்கை 1,71,22,197.
- எழுத்தறிவில் முதல் இரண்டு இடங்களைப் பிடித்திருப்பவை: கேரளம் 93.91 சதவீதம்; லட்சத்தீவு 92.28 சதவீதம்
- கடைசி இரண்டு இடங்களைப் பிடித்திருப்பவை: பீகார் 63.82 சதவீதம்; அருணாசல பிரதேசம் 66.95 சதவீதம்.
- 85 சதவீதத்துக்கு மேல் எழுத்தறிவு விகிதம் உள்ளவை: புதுச்சேரி, கேரளம், லட்சத்தீவு, மிஜோரம், திரிபுரா, கோவா, டாமன்–டையு, சண்டிகார், தலைநகர் தில்லி, அந்தமான்–நிக்கோபார்.

**குழந்தைகள்**
**பாலின விகிதம்**
**(0–6 வயதுப்பிரிவு)**


**2001 - 927**
**2011 - 914**

## பாரபட்ச உலகம்

- கடந்த பத்தாண்டுகளில் இந்தியாவில் பிறந்த ஆண் குழந்தைகளோடு ஒப்பிடுகையில் பெண் குழந்தைகள் குறைவாகவே பிறந்திருக்கிறார்கள். பெண் கருக்கொலை தங்குதடையின்றித் தொடர்வதையே இது காட்டுகிறது.
- இப்போது குழந்தைகளிடையே பாலின விகிதம் 914 என்பது நாட்டின் விடுதலைக்குப் பிறகு மிகக் குறைவானதாகும்.
- குழந்தைகள் பாலின விகிதம் அதிகரிப்பு என்பது பஞ்சாப், ஹரியானா, இமாசல பிரதேசம், குஜராத், தமிழ்நாடு, மிஜோரம், அந்தமான் – நிக்கோபார்.

**மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களின் மக்கள்தொகை பங்கு**

| | |
|---|---|
| உத்தர பிரதேசம் | 16% |
| மஹாராஷ்டிரா | 9% |
| பீகார் | 8% |
| மேற்கு வங்கம் | 7% |
| ஆந்திர மாநிலம் | 7% |
| மத்திய பிரதேசம் | 6% |
| தமிழ் நாடு | 6% |
| ராஜஸ்தான் | 6% |
| கர்நாடகம் | 5% |
| குஜராத் | 5% |
| ஒரிசா | 3% |
| கேரளம் | 3% |
| ஜார்கண்ட் | 3% |
| அஸ்ஸாம் | 3% |
| பஞ்சாப் | 2% |
| சத்திஷ்கர் | 2% |
| ஹரியானா | 2% |
| தில்லி | 1% |
| ஜம்மு–காஷ்மீர் | 1% |
| உத்தராஞ்சல் | 1% |
| இதர மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் | 2% |




ஆதாரம் - **Indian Express, 1.4.2011**

# இறந்த நிலையில் சிசுக்கள் கண்டுபிடிப்பு

பீகாரில் கிஷன்கஞ்ச் மாவட்டத்தில், ரசாயனம் நிரப்பப்பட்ட பிளாஸ்டிக் ஜாடிகளில் அடைக்கப்பட்டு, இறந்த நிலையில், 16 சிசுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

பீகார் தலைநகர் பாட்னாவில் இருந்து, 400 கி.மீட்டர் தொலைவில் உள்ளது கிஷன்கஞ்ச். இங்குள்ள தனியார் நர்சிங் ஹோம் அருகில், ரசாயனம் நிரப்பப்பட்ட 16 பிளாஸ்டிக் ஜாடிகளில், இறந்த நிலையில் 16 சிசுக்கள் அடைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவற்றில் பெரம் பாலானவை பெண் சிசுக்கள்.

இதுகுறித்து கிஷன்கஞ்ச் மாவட்ட போலீஸ் எஸ்.பி., ஆர்.கே.மிஷ்ரா கூறுகையில், 'பிளாஸ்டிக் ஜாடிகளில் அடைக்கப்பட்டிருந்த சிசுக்களின் வயது, 4 முதல் 6 மாதங்களுக்குள் இருக்கும். அனைத்தும், ரசாயனம் கலந்த தண்ணீர் நிரப்பப்பட்ட பிளாஸ்டிக் பாட்டில்களில் அடைக்கப்பட்டு இருந்தன. சட்டத்திற்கு புறம்பான கருக்கலைப்பு நடந்ததா என்பது குறித்து விசாரணை துவக்கியுள்ளோம்' என்றார்.

இதேபோல், கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்திலும், இதே தனியார் மருத்துவமனை அருகே, ரசாயனம் நிரப்பப்பட்ட பிளாஸ்டிக் ஜாடிகளில் 16 சிசுக்கள் இறந்த நிலையில் அடைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதைத் தவிர குஜராத், ஆமதாபாத்தில் உள்ள பாபு நகரில், 12 சிசுக்கள், தெரு நாய்கள் பாதி சாப்பிட்ட நிலையில், சிதறி கிடந்தன. இவற்றில் 7 ஆண், 5 பெண் சிசுக்கள்.

ஆதாரம் – **தினமலர், 6.4.2011**

## பாலின விகிதம் (மக்கள்தொகை), குழந்தைகளின் பாலின விகிதம் (மக்கள் தொகை கணக்கெடுப்பு 2011), பிறக்கும் குழந்தைகளின் பாலின விகிதம் (தகவல் உரிமைச்சட்டம் 2005)

| இந்தியா / மாநிலம் / மாவட்டம் | பாலின விகிதம் (மக்கள் தொகை) | | மாவட்டம்/கிராமப்பகுதி | பிறக்கும் குழந்தைகளின் பாலின விகிதம் | | | | | | | | குழந்தைகளின் பாலின விகிதம் (0–6வயது) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2001 | 2011 | | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2001 | 2011 |
| இந்தியா | 933 | 940 | – | – | – | – | – | – | – | – | – | 927 | 914 |
| தமிழ்நாடு | 987 | 995 | – | – | – | – | – | – | – | – | – | 942 | 946 |
| தர்மபுரி | 932 | 946 | தர்மபுரி | 895 | 920 | 910 | 942 | 917 | 913 | 922 | 919 | 826 | 911 |
| சேலம் | 929 | 954 | சேலம் | 916 | 929 | 945 | 925 | 927 | 928 | 919 | 923 | 851 | 917 |
| நாமக்கல் | 966 | 986 | நாமக்கல் | 929 | 923 | 910 | 909 | 905 | 899 | NA | 905 | 889 | 913 |
| தேனி | 978 | 990 | தேனி | 924 | 910 | 928 | 934 | 924 | 945 | 927 | 949 | 891 | 937 |
| திருவண்ணாமலை | 995 | 993 | திருவண்ணாமலை கிராமப்பகுதி | NA | NA | 963 | 929 | 949 | NA | 950 | 916 | 948 | 932 |
| விழுப்புரம் | 984 | 985 | விழுப்புரம் | NA | 930 | 951 | 961 | 956 | NA | 947 | 912 | 961 | 938 |
| பெரம்பலூர் | 1006 | 1006 | பெரம்பலூர் | 900 | 928 | 909 | 966 | 891 | 926 | 903 | 894 | 937 | 913 |
| அரியலூர் | 1006 | 1016 | அரியலூர் | – | – | – | – | – | – | – | – | 949 | 892 |
| கடலூர் | 986 | 984 | கடலூர் | 981 | 1172 | 987 | 1046 | 989 | 965 | 969 | 944 | 957 | 895 |
| திருவள்ளூர் | 971 | 983 | திருவள்ளூர் | NA | NA | NA | NA | NA | NA | NA | NA | 957 | 954 |
| சென்னை | 957 | 986 | சென்னை மாநகராட்சி | 899 | 907 | 903 | 935 | 946 | 942 | 950 | 948 | 972 | 964 |
| காஞ்சிபுரம் | 975 | 985 | காஞ்சிபுரம் கிராமப்பகுதி | 928 | 947 | 925 | 936 | 927 | 930 | 939 | 927 | 961 | 967 |
| கிருஷ்ணகிரி | 944 | 956 | கிருஷ்ணகிரி | 902 | 928 | 919 | 919 | 918 | 914 | 908 | 920 | 905 | 924 |
| ஈரோடு | 968 | 992 | ஈரோடு | 932 | 942 | 942 | 949 | 942 | 927 | 935 | 928 | 935 | 956 |
| நீலகிரி | 1014 | 1041 | நீலகிரி கிராமப்பகுதி | 987 | 991 | 952 | 959 | 967 | 986 | 972 | 991 | 979 | 982 |
| கோயம்புத்தூர் | 968 | 1001 | கோயம்புத்தூர் | 1054 | 997 | 1021 | 1040 | 980 | 1059 | 1001 | 1006 | 968 | 963 |
| திருப்பூர் | 963 | 988 | திருப்பூர் | 930 | 955 | 982 | 966 | 968 | 960 | 976 | 1001 | 954 | 951 |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| திண்டுக்கல் | 986 | 998 | திண்டுக்கல் | 927 | 942 | 950 | 964 | 953 | 956 | 984 | 965 | 930 | 942 |
| கரூர் | 1010 | 1015 | கரூர் | 937 | 938 | 925 | 925 | 928 | 922 | 951 | 926 | 930 | 946 |
| திருச்சிராப்பள்ளி | 1001 | 1013 | திருச்சிராப்பள்ளி | 944 | 957 | 954 | 963 | 968 | 966 | 983 | 972 | 955 | 952 |
| நாகப்பட்டினம் | 1014 | 1025 | நாகப்பட்டினம் | 958 | 947 | 982 | NA | NA | NA | 958 | 958 | 963 | 961 |
| திருவாரூர் | 1014 | 1020 | திருவாரூர் | 984 | 947 | 959 | 967 | 950 | 965 | 960 | 954 | 970 | 962 |
| தஞ்சாவூர் | 1021 | 1031 | தஞ்சாவூர் | 971 | 965 | 948 | 951 | 968 | 954 | NA | NA | 959 | 957 |
| புதுக்கோட்டை | 1015 | 1015 | புதுக்கோட்டை கிராமப்பகுதி | 977 | 966 | 969 | 954 | 961 | 955 | 972 | 963 | 955 | 959 |
| சிவகங்கை | 1038 | 1000 | சிவகங்கை | 949 | 957 | 978 | 929 | 943 | 957 | 940 | 969 | 952 | 961 |
| மதுரை | 978 | 990 | மதுரை | 926 | 955 | 956 | 922 | 940 | 979 | 947 | 938 | 926 | 939 |
| விருதுநகர் | 1012 | 1009 | விருதுநகர் | NA | 998 | 951 | 939 | 946 | 946 | 971 | 963 | 958 | 962 |
| ராமநாதபுரம் | 1036 | 977 | ராமநாதபுரம் கிராமப்பகுதி | 972 | 968 | 962 | 954 | 954 | 947 | NR | NR | 964 | 967 |
| தூத்துக்குடி | 1050 | 1024 | தூத்துக்குடி கிராமப்பகுதி | 974 | 955 | 993 | 987 | 976 | 941 | 995 | 987 | 953 | 970 |
| திருநெல்வேலி | 1042 | 1024 | திருநெல்வேலி | 961 | 968 | 953 | 964 | 971 | 978 | 965 | 987 | 957 | 964 |
| கன்னியாகுமரி | 1014 | 1010 | கன்னியாகுமரி | 995 | 981 | 982 | 952 | 947 | 975 | 959 | 950 | 968 | 961 |
| வேலூர் | 997 | 1004 | வேலூர் கிராமப்பகுதி | 915 | 926 | 952 | 967 | 976 | 970 | 963 | 973 | 943 | 944 |

**கிராமப்பகுதி : நகராட்சி மற்றும் மாநகராட்சி தவிர**

**குழந்தைகளின் பாலினவிகிதம் (0–6 வயது) தகவல் ஆதாரம்: இயக்குநர், மக்கள் தொகை கணக்கெடுப்பு அலுவலகம், தமிழ்நாடு, முகவரி:E-பிரிவு, 3வது வாடி, இராஜாஜி பவன், பெசன்ட் நகர், சென்னை–600 090. போன்:044–24912993, மின்னஞ்சல்: dco_tam@nic.on , இணையம்: www.censusindia.gov.in / www.cesus.tn.nic.in**

**பிறக்கும் குழந்தைகளின் பாலின விகிதம் தகவல் ஆதாரம்:**
**பெண் கருக்கொலை மற்றும் சிசுக்கொலைக்கு எதிரான பிரச்சாரம்–தமிழ்நாடு– தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின் மூலம் பெற்றது.**

## மொத்த மக்கள் தொகையில் பாலின விகிதம், குழந்தைகளின் பாலின விகிதம்(0–6 வயது), மற்றும் 7வயதிற்கு மேற்பட்டோர் பாலின விகிதம்

| | இந்தியா/ மாநிலம் / யூனியன் பிரதேசம் | பாலின விகிதம் (1000 ஆண்களுக்கு பெண்கள் விகிதம் ) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மொத்த மக்கள் தொகை | | குழந்தைகள் (0–6 வயது) | | 7 வயதிற்கு மேற்பட்டோர் | |
| | | 2001 | 2011 | 2001 | 2011 | 2001 | 2011 |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| | இந்தியா | 933 | 940 | 927 | 914 | 934 | 944 |
| 1 | ஜம்மு–காஷ்மீர் | 892 | 883 | 941 | 859 | 884 | 887 |
| 2 | ஹிமாச்சலபிரதேசம் | 968 | 974 | 896 | 906 | 980 | 938 |
| 3 | பஞ்சாப் | 876 | 893 | 798 | 846 | 888 | 899 |
| 4 | சண்டிகார்* | 777 | 818 | 845 | 867 | 767 | 812 |
| 5 | உத்தராஞ்சல் | 962 | 963 | 908 | 886 | 973 | 975 |
| 6 | ஹரியானா | 861 | 877 | 819 | 830 | 869 | 885 |
| 7 | டெல்லி* | 821 | 866 | 868 | 866 | 813 | 866 |
| 8 | ராஜஸ்தான் | 921 | 926 | 909 | 883 | 923 | 935 |
| 9 | உத்தரபிரதேசம் | 898 | 908 | 916 | 899 | 894 | 910 |
| 10 | பீஹார் | 919 | 916 | 942 | 933 | 914 | 912 |
| 11 | சிக்கிம் | 875 | 889 | 963 | 944 | 861 | 883 |
| 12 | அருணாச்சல பிரதேசம் | 893 | 920 | 964 | 960 | 878 | 913 |
| 13 | நாகலாந்து | 900 | 931 | 964 | 944 | 890 | 929 |
| 14 | மணிப்பூர் | 974 | 987 | 957 | 934 | 977 | 995 |
| 15 | மிசோரம் | 935 | 975 | 964 | 971 | 930 | 976 |
| 16 | திரிபுரா | 948 | 961 | 966 | 953 | 945 | 962 |
| 17 | மேகாலயா | 972 | 986 | 973 | 970 | 971 | 989 |
| 18 | அஸ்ஸாம் | 935 | 954 | 965 | 957 | 929 | 953 |
| 19 | மேற்குவ§கம் | 934 | 947 | 960 | 950 | 929 | 946 |
| 20 | ஜார்கண்ட் | 941 | 947 | 965 | 943 | 935 | 948 |
| 21 | ஒரிசா | 972 | 978 | 953 | 934 | 976 | 985 |
| 22 | சட்டிஸ்கார் | 989 | 991 | 975 | 964 | 992 | 995 |
| 23 | மத்தியபிரதேசம் | 919 | 930 | 932 | 912 | 916 | 933 |
| 24 | குஜராத் | 920 | 918 | 883 | 886 | 927 | 923 |
| 25 | டையூ–டாமன் | 710 | 618 | 926 | 909 | 682 | 589 |
| 26 | தாத்ரா–நாகர் ஹவேலி* | 812 | 775 | 979 | 924 | 779 | 752 |
| 27 | மகாராஷ்டிரா | 922 | 925 | 913 | 883 | 924 | 931 |
| 28 | ஆந்திரப்பிரதேசம் | 978 | 992 | 961 | 943 | 981 | 997 |
| 29 | கர்நாடகா | 965 | 968 | 946 | 943 | 968 | 971 |
| 30 | கோவா | 961 | 968 | 938 | 920 | 964 | 973 |
| 31 | லட்சத்தீவுகள்* | 948 | 946 | 959 | 908 | 946 | 951 |
| 32 | கேரளா | 1058 | 1084 | 960 | 959 | 1072 | 1099 |
| 33 | தமிழ்நாடு | 987 | 995 | 942 | 946 | 993 | 1000 |
| 34 | புதுச்சேரி * | 1001 | 1038 | 967 | 965 | 1006 | 1047 |
| 35 | அந்தமான்–நிக்கோபார் | 846 | 878 | 957 | 966 | 831 | 868 |

* யூனியன் பிரதேசம்

* பதிவாளர் ஜெனரல் மற்றும் இயக்குனர், மக்கள் தொகை கணக்கெடுப்பு, இந்தியா

# மக்கள் தொகை கணக்கெடுப்பு 2011

| | இந்தியா/ மாநிலம் / யூனியன் பிரதேசம் | மக்கள் தொகை | | | 10 ஆண்டுகால வளர்ச்சி சதவீதம் 2001–2011 | பிறப்பு விகிதம் | ஜனத்தொகை அடர்த்தி (1 ச.கீமி) | குழந்தைகள் (0–6 வயது) | பிறப்பு விகிதம் (0–6 வயது) | எழுத்தறிவு விகிதாச்சாரம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மொத்தம் | ஆண் | பெண் | | | | | | மொத்தம் | ஆண் | பெண் |
| 1 | இந்தியா | 1210193422 | 623724248 | 586469174 | 17.64 | 940 | 382 | 158789287 | 914 | 74.04 | 82.14 | 65.46 |
| 2 | ஜம்மு–காஷ்மீர் | 12548926 | 6665561 | 5883365 | 23.71 | 883 | 124 | 2008642 | 859 | 68.74 | 78.26 | 58.01 |
| 3 | ஹிமாச்சலபிரதேசம் | 6856509 | 3473892 | 3382617 | 12.81 | 974 | 123 | 763864 | 906 | 83.78 | 90.83 | 76.6 |
| 4 | பஞ்சாப் | 27704236 | 14634819 | 13069417 | 13.73 | 893 | 550 | 2941570 | 846 | 76.68 | 81.48 | 71.34 |
| 5 | சண்டிகார்* | 1054686 | 580282 | 474404 | 17.1 | 818 | 9252 | 117953 | 867 | 86.43 | 90.54 | 81.38 |
| 6 | உத்தராஞ்சல் | 10116752 | 5154178 | 4962574 | 19.17 | 963 | 189 | 1328844 | 886 | 79.63 | 88.33 | 70.7 |
| 7 | ஹரியானா | 25358081 | 13505130 | 11847951 | 19.9 | 877 | 573 | 3297724 | 830 | 76.64 | 85.38 | 66.77 |
| 8 | டெல்லி* | 16753235 | 8976410 | 7776825 | 20.96 | 866 | 11297 | 1970510 | 866 | 86.34 | 91.03 | 80.93 |
| 9 | ராஜஸ்தான் | 68621012 | 35620086 | 33000926 | 21.44 | 926 | 201 | 10504916 | 883 | 67.06 | 80.51 | 52.66 |
| 10 | உத்தரபிரதேசம் | 199581477 | 104596415 | 94985062 | 20.09 | 908 | 828 | 29728235 | 899 | 69.72 | 79.24 | 59.26 |
| 11 | பீஹார் | 103804637 | 54185347 | 49619290 | 25.07 | 916 | 1102 | 18582229 | 933 | 63.82 | 73.39 | 53.33 |
| 12 | சிக்கிம் | 607688 | 321661 | 286027 | 12.36 | 889 | 86 | 61077 | 944 | 82.2 | 87.29 | 76.43 |
| 13 | அருணாச்சல பிரதேசம் | 1382611 | 720232 | 662379 | 25.92 | 920 | 17 | 202759 | 960 | 66.95 | 73.69 | 59.57 |
| 14 | நாகலாந்து | 1980602 | 1025707 | 954895 | –0.47 | 931 | 119 | 285981 | 944 | 80.11 | 83.29 | 76.69 |
| 15 | மணிப்பூர் | 2721756 | 1369764 | 1351992 | 18.65 | 987 | 122 | 353237 | 934 | 79.85 | 86.49 | 73.17 |
| 16 | மிசோரம் | 1091014 | 552339 | 538675 | 22.78 | 975 | 52 | 165536 | 971 | 91.58 | 93.72 | 89.4 |
| 17 | திரிபுரா | 3671032 | 1871867 | 1799165 | 14.75 | 961 | 350 | 444055 | 953 | 87.75 | 92.18 | 83.15 |
| 18 | மேகாலயா | 2964007 | 1492668 | 1471339 | 27.82 | 986 | 132 | 555822 | 970 | 75.48 | 77.17 | 73.78 |
| 19 | அஸ்ஸாம் | 31169272 | 15954927 | 15214345 | 16.93 | 954 | 397 | 4511307 | 957 | 73.18 | 78.81 | 67.27 |
| 20 | மேற்குவங்கம் | 91347736 | 46927389 | 44420347 | 13.93 | 947 | 1029 | 10112599 | 950 | 77.08 | 82.67 | 71.16 |
| 21 | ஜார்கண்ட் | 32966238 | 16931688 | 16034550 | 22.34 | 947 | 414 | 5237582 | 943 | 67.63 | 78.45 | 56.21 |
| 22 | ஒரிசா | 41947358 | 21201678 | 20745680 | 13.97 | 978 | 269 | 5035650 | 934 | 73.45 | 82.4 | 64.36 |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 23 | சட்டிஸ்கார் | 25540196 | 12827915 | 12712281 | 22.59 | 991 | 189 | 3584028 | 964 | 71.04 | 81.45 | 60.59 |
| 24 | மத்தியபிரதேசம் | 72597565 | 37612920 | 34984645 | 20.3 | 930 | 236 | 10548295 | 912 | 70.63 | 80.53 | 60.02 |
| 25 | குஜராத் | 60383628 | 31482282 | 28901346 | 19.17 | 918 | 308 | 7494176 | 886 | 79.31 | 87.23 | 70.73 |
| 26 | டையூ–டாமன் | 242911 | 150100 | 92911 | 53.54 | 618 | 2169 | 25880 | 909 | 87.07 | 91.48 | 79.59 |
| 27 | தாத்ரா–நாகர் ஹவேலி* | 342853 | 193178 | 149675 | 55.5 | 775 | 698 | 49196 | 924 | 77.65 | 86.46 | 65.93 |
| 28 | மகாராஷ்டிரா | 112372972 | 58361397 | 54011575 | 15.99 | 925 | 365 | 12848375 | 883 | 82.91 | 89.82 | 75.48 |
| 29 | ஆந்திரப்பிரதேசம் | 84665533 | 42509881 | 42155652 | 11.1 | 992 | 308 | 8642686 | 943 | 67.66 | 75.56 | 59.74 |
| 30 | கர்நாடகா | 61130704 | 31057742 | 30072962 | 15.67 | 968 | 319 | 6855801 | 943 | 75.6 | 82.85 | 68.13 |
| 31 | கோவா | 1457723 | 740711 | 717012 | 8.17 | 968 | 394 | 139495 | 920 | 87.4 | 92.81 | 81.84 |
| 32 | லட்சத்தீவுகள்* | 64429 | 33106 | 31323 | 6.23 | 946 | 2013 | 7088 | 908 | 92.28 | 96.11 | 88.25 |
| 33 | கேரளா | 33387677 | 16021290 | 17366387 | 4.86 | 1084 | 859 | 3322247 | 959 | 93.91 | 96.02 | 91.98 |
| 34 | தமிழ்நாடு | 72138958 | 36158871 | 35980087 | 15.6 | 995 | 555 | 6894821 | 946 | 80.33 | 86.81 | 73.86 |
| 35 | புதுச்சேரி * | 1244464 | 610485 | 633979 | 27.72 | 1038 | 2598 | 127610 | 965 | 86.55 | 92.12 | 81.22 |
| 36 | அந்தமான்–நிக்கோபார் | 379944 | 202330 | 177614 | 6.68 | 878 | 46 | 39497 | 966 | 86.27 | 90.11 | 81.84 |

குறிப்பு:

1. **இந்தியா மற்றும் மணிப்பூரின் பாலின விகிதம் மதிப்பிடப்பட்ட மக்கள்தொகை, 0–6 வயது மக்கள்தொகை அளவீடு, 2001 மற்றும் 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பிற்காக மணிப்பூரின் செனாப்பட்டி மாவட்டத்தின் பாமாட்டா, மவோ மாரம் மற்றும் பரந்துபட்ட துணைப்பிரிவுகளை உள்ளடக்கியது.**
2. **ஜம்மு & காஷ்மீர் மற்றும் இந்தியாவின் ஜனத்தொகை அடர்த்தி கணக்கெடுக்கும் போது, சீனா மற்றும் பாகிஸ்தானின் சட்டவிரோதமான ஆக்கிரமிப்பில் உள்ள ஜம்மு & காஷ்மீர் பிரதேசத்தில் உள்ள மக்கள்தொகை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.**
3. **2011 மக்கள்தொகை கணக்கெடுப்பில் மொத்த மக்கள்தொகை, 0–6 வயது மக்கள்தொகை, படித்தவர்கள் மற்றும் பிற புள்ளிவிவரங்கள் கணக்கெடுக்கும் போது “பிறர்” மக்கள்தொகை “ஆண்களோடு” இணைத்துக்கொள்ளப்பட்டது.**

# இந்தியாவின் குழந்தைகளைப் பாதுகாத்தல்

– கல்பனா சர்மா

*நம் குழந்தைகளில் கிட்டத்தட்ட பாதிப்பேர் ஊட்டச்சத்தின்மை காரணமாகவும் பட்டினியின் காரணமாகவும் வளர்ச்சி குன்றியவர்களாகவே இருப்பார்கள். இதை நாம் மாற்றுவது எப்படி?*

ஊழல்களும் தில்லுமுல்லுகளும் நிறைந்த ஒரு ஆண்டு முடிவடைந்துவிட்டது. 2011 அதிலிருந்து மாறுபட்டதாக இருக்குமா? 2011க்கான விருப்பப் பட்டியல் ஒன்றைத் தயார் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டால், எனது பட்டியலில் முதலிடம் பிடிப்பதாக, குழந்தைகளின் ஊட்டச்சத்தின்மை பிரச்சனையைக் கையாள்வதே அரசின் மிக முக்கிய முன்னுரிமைக் கடமைகளில் ஒன்றாக இருக்க வேண்டும் என்ற விருப்பமே இருக்கும்.

**இன்று பங்களாதேஷைவிட மிக அதிகமான எண்ணிக்கையில் ஊட்டச்சத்தில்லாத குழந்தைகள் இந்தியாவில் இருக்கிறார்கள். காங்கோ, லெசோதோ, டான்ஜானியா, ருவாண்டா போன்ற ஆப்பிரிக்க நாடுகள்கூட இன்று இதில் நமக்குப் பின்னேதான் இருக்கின்றன.**

இந்தியாவில் நிலவும் அப்பட்டமான முரண்பாடுகள் யாவரும் அறிந்ததே: ஒரு பக்கம் உலகின் மிகப்பெரிய பணக்காரர்கள், இன்னொரு பக்கம் இதே நாட்டில் ஏழைகளிலும் ஏழைகளாக வாழ்ந்துகொண்டிருப்பவர்கள்; ஒரு பக்கம் உயர்ந்த பொருளாதார வளர்ச்சி விகிதம், இன்னொரு பக்கம் அதிகரித்து வரும் சமத்துவமின்மையும் ஏற்றத்தாழ்வும்; ஒரு பக்கம் நம் நகரங்களில் தங்குதடையற்ற நுகர்வு, இன்னொரு பக்கம் கிராமங்களிலும் வனப்பகுதிகளிலும் உயிர்வாழ்வதற்கான அடிப்படைகள் கூட இல்லாத நிலை.

இந்தியாவின் இன்றைய நிலைமை குறித்த மிக மோசமான தகவல் எதுவெனில், நம் குழந்தைகளில் 45 சதவீதத்தினர் போதுமான அளவுக்கு உணவு கிடைக்காத காரணத்தால் வளர்ச்சி தடைப்பட்டவர்களாக இருக்கிறார்கள் என்பதுதான். இதை எப்படி ஏற்க முடியும்? மிகவும் ஏழ்மை நிலையிலிருந்த நாடுகளின் பட்டியலிலிருந்து நடுத்தர வருமானம் உள்ள நாடாக வளர்ந்துவிட்டோம் என்று எப்படி பெருமைப்பட்டுக் கொள்வது?

2011ம் ஆண்டை நான், ஊட்டச்சத்தில்லாத குழந்தைகள் பற்றிய புள்ளிவிவரத்தை மறுபடியும் பார்த்ததிலிருந்து தொடங்கினேன். அந்த விவரங்கள் நடுங்கவைக்கும் குளிரில் நனைகிற உணர்வையும், கவலையையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்துவதாக இருந்தன.

அண்டை நாடாகிய பங்களாதேஷ் பத்தாண்டுகளுக்கு முன்பு வரையில், இந்தப் பிரச்சனையில் நிதானமிழந்துவிட்ட நாடாகக் கருதப்பட்டது. இன்று பங்களாதேஷை விட மிக அதிகமான எண்ணிக்கையில் ஊட்டச்சத்தில்லாத குழந்தைகள் இந்தியாவில் இருக்கிறார்கள். காங்கோ, லெசோதோ, டான்ஜானியா, ருவாண்டா போன்ற ஆப்பிரிக்க நாடுகள் கூட இன்று இதில் நமக்குப் பின்னேதான் இருக்கின்றன.

### அடிப்படைப் பிரச்சனை

இந்த ஒரு குறிப்பிட்ட பிரச்சனை பற்றி ஏன் இவ்வளவு தூரம் கவலைப்பட வேண்டும்? இந்த நாட்டில் இரண்டு குழந்தைக்கு ஒரு குழந்தை வெறும் வயிற்றோடுதான் உறங்கச் செல்கிறது என்ற உண்மையே அதிர்ச்சியளிப்பதாக இருப்பதால்தான். குழந்தை மரணங்களுக்கு முக்கிய காரணமாக இருப்பது ஊட்டச்சத்தின்மையே என்பதால்தான். இந்தப் பிரச்சனையை சமாளித்தால், குழந்தை மரணங்களில் பாதியைத் தடுக்க முடியும். ஊட்டச்சத்தின்மை காரணமாகக் குழந்தைகளின் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்துவிடுகிறது; அதனால்தான் பல குழந்தைகள் மரணமடைகின்றன. இதன் விளைவாக, வயிற்றுப் போக்கு, மூச்சுக் குழாய் தொற்று போன்ற சிறப்பாக சிகிச்சையளிக்கக்கூடிய நோய்களால் பாதிப்புகளுக்கு உள்ளாகிறபோதுகூட அவர்கள் இரையாகக்கூடிய நிலை ஏற்படுகிறது.

ஊட்டச்சத்து பற்றாக்குறை உள்ள குழந்தைகளின் எண்ணிக்கை இவ்வளவு அதிகமாக இருப்பது மட்டுமே கவலையளிக்கிற விசயம் அல்ல; இந்த எண்ணிக்கை குறைவது என்பது மிகக் குறைந்த வேகத்திலேயே, அநேகமாகக் குறையவே இல்லை எனக் கூறத் தக்க அளவிலேயே நடக்கிறது. 1998–99ம் ஆண்டிற்கும், 2005–06ம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் ஒரே ஒரு

சதவீதம் அளவுக்கே இது குறைந்தது. இந்த வேகத்தில்தான் இது நடைபெறும் என்றால், ஆயிரத்தாண்டு மேம்பாட்டு இலக்கின் ஒரு பகுதியாக 2015ம் ஆண்டு வாக்கில் குழந்தைகளிடையே நிலவும் ஊட்டச்சத்தின்மையைப் பாதியாகக் குறைப்பது என்ற லட்சியம் நிறைவேறுவது சாத்தியமே இல்லை.

மற்றவர்கள் பொறாமைப்படத்தக்க அளவுக்குப் பொருளாதார வளர்ச்சி உள்ள ஒரு நாட்டில் இப்படி நிகழ்வது ஏன்? மேம்பாட்டுப் பொருளாதார ஆய்வாளர் ஏ.கே. சிவ குமார் அண்மையில் எழுதிய ஒரு கட்டுரையில், தனிநபர் வருமானம் அதிகரித்துவிட்டால் தானாகவே ஊட்டச்சத்தின்மையும் குறைந்துவிடும் என்ற நம்பிக்கை சரியாகத்தான் இருக்கவேண்டுமென்பதில்லை என்று சுட்டிக்காட்டியிருக்கிறார். எடுத்துக்காட்டாக சஹாரா சார்ந்த 37 ஆப்பிரிக்க நாடுகளில் 28 நாடுகள் இந்தியாவை விடவும் குறைவான தனிநபர் வருமானமே கொண்டுள்ளன. ஆனால் அங்கெல்லாம் குழந்தைகளின் ஊட்டச்சத்தின்மை விகிதங்களும் குறைவாகவே உள்ளன. இந்தியாவுக்கு உள்ளேயே கூட தனிநபர் வருவாய் மிகக் குறைவாக ரூ.8,114 ஆக (1997–98) உள்ள மணிப்பூர் மாநிலத்தில், குழந்தைகள் ஊட்டச்சத்தின்மை என்பது 28 சதவீதம் அளவுக்கே உள்ளது. இதற்கு நேர்மாறாக, ரூ.16,251 என்ற மிக அதிகமான தனிநபர் வருவாய் கொண்ட மாநிலமான குஜராத்தில், குழந்தைகள் ஊட்டச்சத்தின்மை விகிதம் அதிகமாக 45 சதவீதமாக இருக்கிறது.

சிக்கிம், மத்திய பிரதேசம் ஆகிய இரண்டு மாநிலங்களை ஒப்பிட்ட சிவகுமார் தெரிவித்துள்ள தகவல்கள், குழந்தைகள் ஊட்டச்சத்தின்மை பிரச்சனையில் இன்னொரு முக்கிய கோணத்தை – பாலின பாகுபாட்டு கோணத்தை – வெளியே கொண்டுவந்துள்ளன.

சிக்கிம் மாநிலத்தில் எடைக் குறைவாகப் பிறக்கும் குழந்தைகள் 13 சதவீதம். மத்திய பிரதேசத்தில் இது 24 சதவீதம். சிக்கிம் மாநிலத்தின் திருமணமான பெண்களில் 11 சதவீதத்தினர், 18.5க்கும் குறைவான பீஎம்ஐ (உடல் திண்மை விகிதம்) உள்ளவர்களாவர் (இது குறைவான விகிதம் என்று கருதப்படுகிறது). மத்திய பிரதேசத்தில் இவ்வகைப் பெண்கள் 38 சதவீதத்தினர் உள்ளனர். சிக்கிம் மாநிலத்தில் 0–6 வயதுப்பிரிவு பாலின விகிதம் 1,000 ஆண்களுக்கு 986 பெண்கள். மத்திய பிரதேசம் மாநிலத்தில் 929. சிக்கிமில் பெண்களின் திருமண வயது 22. மத்திய பிரதேசத்தில் 19. சிக்கிம் பெண்களில் எழுத்தறிவு பெற்றவர்கள் 62 சதவீதம், மத்திய பிரதேசத்தில் 50 சதவீதம். சிக்கிமில் 6–17 வயதுப்பிரிவு பெண் குழந்தைகளில் 89 சதவீதத்தினர் பள்ளிகளில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள், மத்திய பிரதேசம் மாநிலத்தில் 71 சதவீதத்தினர்தான்.

## முக்கிய இணைப்பு

வேறு வார்த்தைகளில் சொல்வதானால், சிக்கிம் பெண்கள் தாமதமாகத் திருமணம் செய்துகொள்கிறார்கள், அதிகமாகப் படித்தவர்களாக இருக்கிறார்கள், நல்ல ஆரோக்கியத்தோடு இருக்கிறார்கள். இதன் விளைவாக, இங்கு பிறக்கும்போது குறைந்த எடையுடன் பிறக்கும் குழந்தைகள் குறைவு. கல்வி வாய்ப்பும் சுகாதார வாய்ப்பும் கிடைக்கப்பெறுகிற பெண்களின் நிலைக்கும், குழந்தைகளின் ஊட்டச்சத்து பற்றாக்குறைப் பிரச்சனைக்கும் உள்ள இணைப்பு வெளிப்படையாகத் தெரிகிறது. பெண்களுக்கே கூட ஊட்டச்சத்து பற்றாக்குறை பிரச்சனையும் ரத்த சோகை பாதிப்பும் உள்ளன (இந்தியாவில் 56 சதவீத பெண்கள் ரத்தசோகையால் பாதிக்கப்பட்டவர்கள்). இத்தகைய பெண்கள் இளம் வயதிலேயே கருவடையும்போது, எடை குறைவான குழந்தைகளையே பிரசவிக்கிறார்கள். அந்தக் குழந்தைகள் ஒரு போதும் ஊட்டம் பெறுவதில்லை.

**புலிகளைப் பாதுகாக்க விரிவான விழிப்புணர்வு இயக்கத்தை நம் ஊடகங்கள் மேற்கொண்டன. அது ஒரு செயலூக்கமுள்ள இயக்கமாக அமைந்தது. இந்தியாவின் குழந்தைகளும் அழிவின் விளிம்பில்தான் நிற்கிறார்கள். அவர்களைப் பாதுகாக்கவும் ஒரு செயலூக்கமுள்ள பிரச்சார இயக்கம் தேவைப்படுகிறது.**

இதில் கவனிக்கத்தக்க ஒரு தகவல் உள்ளது. ரத்த சோகையின் அண்மை நிலவரம் குறித்து அறிக்கை அளித்துள்ள தேசிய குடும்ப ஆரோக்கிய ஆய்வு – 3 (2005–06), 56 சதவீத பெண்கள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறபோது, ஆண்களில் ரத்த சோகை பாதிப்பு உள்ளவர்கள் 24 சதவீதம்தான் என்று தெரிவிக்கிறது. ரத்த சோகை விசயத்திலும் கூட நிச்சயமாக ஒரு பாலின பாகுபாட்டுக் கோணம் இருக்கிறது. மேலும், 15–19 வயதுப் பிரிவைச் சேர்ந்த பெண்களில் 47 சதவீதத்தினர் ரத்த சோகை பாதிப்பு உள்ளவர்கள். இந்தியாவில் உள்ள கர்ப்பிணிப் பெண்களில் 59 சதவீதத்தினர் ரத்த சோகையாளிகள் தான்.


இவையெல்லாம் மேலோட்டமாகப் பார்த்தால் வெறும் புள்ளிவிவரங்கள்தான். ஆனால், அடுத்தமுறை ஏதேனும் ஒரு கிராமத்தில் அல்லது உங்கள் நகரத்தின் குடிசைப்பகுதியில் குழந்தைகள் மரணம் பற்றிய செய்தியைக் கேள்விப்படும்போது இத்தகவல்களோடு இணைத்துப் பாருங்கள். கடந்த ஆண்டு டிசம்பரில் மும்பை மக்கள் ஒரு மோசமான அதிர்ச்சிச் செய்தியை எதிர்கொண்டார்கள். இந்தியாவின் மிக வேகமாக முன்னேறி வரும் ஒரு பெருநகரத்தில் இருப்பதாலேயே, அங்குள்ள ஏழைக் குழந்தைகளுக்கு உயிர்வாழ்வதற்கான சிறப்பான வாய்ப்புகள் இருப்பதாக அர்த்தமல்ல என்பதை உணரவைத்த செய்தி அது. கோவாண்டி வட்டாரத்தில் சிவாஜி நகர் குடிசைப்பகுதியில் சாஹில் சலீம் என்ற, 9 கிலோ எடையே கொண்ட, 15 மாதக் குழந்தை, காய்ச்சலாலும் சளியாலும் இறந்துபோனான் என்ற அந்தச் செய்தி, எப்படி நம் நகரங்கள் கிராமங்கள் இரண்டிலுமே ஏழைகள் பட்டினியால் வாடுகிறார்கள் என்ற உண்மையைத் தெளிவாக உணர்த்தியது. நகரங்களில் உள்ள ஊட்டச்சத்துக் குறைவான குழந்தைகளின் விகிதம் கிராமங்களை விடவும் பரவாயில்லைதான். அப்போதும் கூட 32 சதவீதம் அல்லது மூன்றுக்கு ஒன்று என்ற விகிதம் ஏற்கத்தக்கதல்ல.

நாம் எண்ணிப்பார்க்க விரும்புகிற இந்தியா இதுவல்ல. எனினும், நம் பெண்களில் பாதிப்பேர் ரத்த சோகையாளிகள், குழந்தைகளில் பாதிப்பேருக்கு சற்றே குறைவானவர்கள் தொடர்ந்து உயிர்வாழ்ந்திருக்கும் வாய்ப்பு இல்லாதவர்கள் என்ற இந்தப் புள்ளிவிவரங்கள் இதுதான் இந்தியா என்று காட்டுகின்றன.

இதை மாற்ற நாம் என்ன செய்யப்போகிறோம்? அரசு இதனை ஒரு முன்னுரிமைப் பிரச்சனையாக எடுத்துக்கொண்டாக வேண்டும்; இத்தகைய பிரச்சனைகளைக் கையாள்வதற்கென்றே உருவாக்கப்பட்ட ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுத் திட்டம் (ஐசிடீஎஸ்) போன்ற திட்டங்களை மறு ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும்.

ஆனால், இதை விடவும் கூடுதலான பணிகள் நம் முன் உள்ளன. புலிகளைப் பாதுகாக்க விரிவான விழிப்புணர்வு இயக்கத்தை நம் ஊடகங்கள் மேற்கொண்டன. அது ஒரு செயலூக்கமுள்ள இயக்கமாக அமைந்தது. இந்தியாவின் குழந்தைகளும் அழிவின் விளிம்பில்தான் நிற்கிறார்கள். அவர்களைப் பாதுகாக்கவும் ஒரு செயலூக்கமுள்ள பிரச்சார இயக்கம் தேவைப்படுகிறது. வறுமை – பட்டினி என்ற வட்டத்தை உடைக்கும் அந்த விழிப்புணர்வு இயக்கத்தில் ஊடகங்கள், பள்ளிகள், கல்லூரிகள், அரசியல் அமைப்புகள், தொழில் நிறுவனங்கள், அக்கறையுள்ள எவரொருவரும் ஈடுபட்டாக வேண்டும். ❑

ஆதாரம் – **The Hindu, 9.1.11**




ஆதாரம் – தினமலர் 09.05.2010

# குறையும் பாலின விகிதம் – கருவிலேயே பாலினம் அறியும் சோதனை தடுப்புச்சட்டத்தை வலுப்படுத்த தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் வலியுறுத்தல்

மக்கள்தொகை கணக்கெடுப்பில் குழந்தைகளின் (0–6 வயது) பாலின விகிதம் குறைந்திருப்பது கவலையளிப்பதாகச் சொல்லியுள்ள தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணைய (என்சிபிசிஆர்) தலைவர் சாந்தா சின்ஹா கரு சோதனை தொழில்நுட்பங்கள் (பிஎன்டீடி) சட்டத்தை வலுப்படுத்த வலியுறுத்தியுள்ளார். "இது சுனாமி தாக்குதல் போல இருக்கிறது. தெளிவான புள்ளிவிவரங்கள் கிடைக்கவில்லை என்றாலும், உயிர்பிழைத்திருக்க வேண்டிய (0–6 வயது) பெண் குழந்தைகள் பிழைத்திருக்கவில்லை. அதற்குக் காரணம் ஸ்கேனிங் என்ற போர்வையில் நடத்தப்படுகிற கருவிலேயே பாலினம் அறிகிற சோதனைதான்," என்றார் அவர்.

"பிஎன்டீடி (PNDT) சட்டம் வலுப்படத்தப்படாத வரையில், அப்படி வலுப்படுத்தப்பட்டு விளைவை ஏற்படுத்தக்கூடிய அளவுக்குச் செயல்படுத்தப்பட்டாலன்றி, பாலின விகிதத்தில் முன்னேற்றம் ஏற்படாது," என்றார் சாந்தா சின்ஹா. தமிழ்நாடு போன்ற சில மாநிலங்கள் தவிர்த்து மற்ற மாநிலங்கள் எல்லாவற்றிலுமே ஒரே விதமாக குழந்தைகள் பாலின விகிதம் குறைந்திருக்கிறது என்று அவர் சுட்டிக்காட்டினார். பல மாநிலங்களில் பாலினப் பாகுபாடு இருப்பது தெளிவாகப் புலப்படுகிறது. கருவில் பாலினத்தை அறியும் சோதனைகளில் ஈடுபடும் மருத்துவர்கள், பெற்றோருடன் சேர்த்து பிஎன்டீடி சட்டப்படி தண்டனைக்கு உரியவர்கள் என்றார் அவர். மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் கிருஷ்ணா தீரத், பஞ்சாப், ஹரியானா, இமாசல பிரதேசம், குஜராத், தமிழ்நாடு, மிஜோரம், அந்தமான்–நிகோபார் ஆகிய இடங்களில் (0–6 வயதுப் பிரிவினர்) குழந்தைகள் பாலின விகிதம் அதிகரித்திருக்கிறது என்றார். இதர 27 மாநிலங்களிலும் யூனியன் பிரதேசங்களிலும் 2001ம் ஆண்டுக் கணக்கெடுப்பை விடவும் குறைந்திருக்கிறது என்றார்.

பெண்குழந்தை மக்கள்தொகையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி கவலைக்குரியது. 2001–2011 கணக்கெடுப்பில் 0–6 வயதுப்பிரிவு மக்கள்தொகையில் ஆண் குழந்தைகளில் –2.42 சதவீதமும் பெண் குழந்தைகளில் –3.80 சதவீதமும் என மைனஸ் வளர்ச்சி விகிதம் ஏற்பட்டிருக்கிறது என்றார் அமைச்சர். குழந்தைகள் பாலின விகிதத்தில் உச்சத்தில் இருப்பது மிஜோரம். அங்கு 0–6 வயதுப்பிரிவில் பாலின விகிதம் 970. அதற்கு அடுத்த இடத்திற்கு வருவது மேகாலயா 970. இதில் மிகவும் அடிமட்டத்தில் இருப்பது ஹரியானா 830; அதற்கடுத்த நிலையில் இருப்பது பஞ்சாப் 846. மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டங்களை முறையாக அமலாக்குவதன் அவசியத்தை வலியுறுத்திய அமைச்சர் கிருஷ்ணா தீரத், பிரச்சனைக்குரிய மாநிலங்களில் தாம் தலையிட இருப்பதாகக் கூறினார். அங்கன்வாடி மையங்களில் சேவைகளை மேம்படுத்துவதன் அவசியத்தை சாந்தா சின்ஹாவும் வலியுறுத்தினார். கர்ப்பத்தில் இருக்கிற கட்டத்திலிருந்தே பிரசவங்களைக் கண்காணிக்கிற ஏற்பாடுகள் தேவை என்றும் அவர் கூறினார். ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் 0–6 வயதுப்பிரிவின் ஒவ்வொரு குழந்தையும் உயிர்வாழ்ந்திருக்க வேண்டும்; ஒவ்வொரு குழந்தையும் கல்வி உரிமையைப் பெற்றிருக்க வேண்டும் என்றார் எசிபிசிஆர் தலைவர்.

கல்வி உரிமைச் சட்டம் (ஆர்டிஇ) கொண்டுவரப்பட்டு ஓராண்டு காலம் ஆகிவிட்டது. இருந்தபோதிலும் ஒவ்வொரு குழந்தையும் பள்ளியில் சேர்க்கப்படுவதையும், ஒவ்வொரு குழந்தையும் தனது தினசரி வாழ்க்கையை எவ்வித இடையூறுமின்றி அனுபவிப்பதையும் உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றார் சாந்தா சின்ஹா. "ஆர்டிஇ (RTE) சட்டம் அதில் உள்ளபடி உணர்வுப்பூர்வமாகச் செயல்படுத்தப்பட வேண்டும், ஒவ்வொரு குழந்தையும் தனது கல்வி உரிமையைப் பெற்றாக வேண்டும் என்ற ஒரு விழிப்புணர்வு நிச்சயமாக ஏற்பட்டிருக்கிறது. ஆனால், இந்தப் பிரச்சனைகளில் மாநில அரசுகளின் செயல்பாடு ஒரே விதமாக இல்லை என்பது தெரிகிறது. சில மாநிலங்கள் சில பிரச்சனைகளில் மற்றவற்றை விட முன்னேறியுள்ளன," என்றார் அவர். புகார்களை கவனிக்க சிறந்த முறையில் வரையறுக்கப்பட்ட ஒரு குறை தீர்ப்பு ஏற்பாடு தேவை என்று கூறிய அவர், ஆர்டிஇ சட்டத்தை ஒரு நடப்பு உண்மையாக மாற்ற குடிமைச் சமூகமும் அரசு அமைப்பும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றார். குழந்தைத் தொழிலாளர் (தடுப்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்திலும் பிற சட்டங்களிலும் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்ற ஆலோசனையையும் அவர் முன்வைத்தார். என்சிபிசிஆர் தேசிய ஒருங்கிணைப்பாளர் கிரண் பாட்டி, அரசுப்பள்ளிகளின் சுவர்களில் ஆர்டிஇ சட்ட விதிகள் வெளிப்படையாக ஒட்டப்பட வேண்டும் என்று கூறினார். ❑

ஆதாரம் – **Indian Express, 1.4.2011**

# கர்நாடகா மாநிலத்தில் அரசு, குடிமைச் சமூகம் மற்றும் குழந்தை உழைப்பை ஒழித்தல்

– V. அனில்குமார்

**கர்நாடகா அரசும் குடிமைச் சமூகமும் ஒன்றிணைந்து குழந்தை உழைப்பை ஒழிப்பதற்காக எடுக்கும் கூட்டு முயற்சி சுவையானதொரு விஷயமாகும். குழந்தைத் தொழிலாளர்களைக் கண்டறிந்து அவர்களை மீட்டெடுக்கும் இமாலய முயற்சிக்குப் பிறகு இந்த இரு அமைப்புகளும் குழந்தைத் தொழிலாளர்களை முக்கியப்படுத்துதல் அதாவது அவர்களை அரசுப் பள்ளிகளில் சேர்த்திடுதல் என்னும் பணியில் முற்றிலும் ஈடுபாடு காட்டுகிறார்கள். இந்த முயற்சியானது குழந்தை உழைப்பை முற்றிலுமாக ஒழிப்பதற்கான முக்கியக் குறிக்கோளாகும். இந்த முயற்சி மிகக் குறைந்த தாக்கத்தையும் உருவில்லாத நிலையற்ற மாற்றத்தையும் தான் தந்திருக்கிறது.**

இந்த கட்டுரையின் சுருக்கமானது 2008 நவம்பர் மாதத்தில் டெல்லியில் நடந்த "குழந்தைப் பருவமும் குழந்தைகளின் உரிமைகளும்" என்னும் கருத்துப்பட்டறையில் வாசிக்கப்பட்டது. இதனை எழுதிய திருமிகு. V. அனில் குமார் பெங்களூரிலுள்ள சமூகப் பொருளாதார மாற்றங்களுக்கான நிறுவனத்திலுள்ள அரசியல் நிறுவனங்கள், வளர்ச்சி ஆளுமை மையத்தில் பணியாற்றுகிறார்.

தனியார் மற்றும் "பொதுத்துறை இணைந்து பணியாற்றுதல்" என்பது சமீப காலங்களில் அடிக்கடி உபயோகப்படுத்தபடும் வார்த்தையாக இருக்கிறது. இந்த இணைந்து பணியாற்றுதல் என்பதானது எப்படி பொருள் கொள்ளப்படுகிறதென்றால் அரசு (பொதுத்துறை) தனியார் (தனியார் நிறுவனங்கள்) நிறுவனங்கள் சேர்ந்து அல்லது இணைந்து செயலாற்றுவதாக இந்த விளக்கம் சல சமயங்களில் அரசு சாரா தொண்டு நிறுவனங்களையும் உள்ளடக்கி திரித்துப் பொருள் கொள்ளப்படுகிறது. திரித்துப்பொருள் கொள்ளப்படுவதாக ஏன் கூறுகின்றோம் என்றால் இந்த நிறுவனங்களை (NGO's) தனியார் நிறுவனங்களாகப் பொருள் கொள்ள முடியாது. இந்நிறுவனங்கள் தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களுக்கு இடையே நடுவில் உள்ள இடத்தில் பொருந்துவதாக அமையும் நாம் கொள்ள வேண்டிய பொருள் என்னவெனில் அரசு இந்த நிறுவனங்களை (NGO's) வெகுவாக சார்ந்திருப்பதோடு அவைகளின் பங்களிப்பையும் வெகுவாக எதிர்நோக்குகிறது. அரசின் நலத்திட்டங்களை செயல்படுத்துவதிலும் கூட எந்த அளவுக்கு இந்த இணைந்து பணியாற்றும் திட்டம் வெற்றிகரமாய் செயல்படும் என்பது கேள்விக்குறியாகும். அரசும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களும் இணைந்து பணியாற்றுவது பற்றி கர்நாடக மாநிலத்தில் போற்றிப் புகழ்ந்து பேசப்படுகிறது. கர்நாடக மனித வளர்ச்சி அறிக்கை 2005 ஒரு தனி அத்தியாயத்தையே இதற்காக ஒதுக்கி இருக்கிறது என்பதிலிருந்து இதன் முக்கியத்துவத்தை உணரலாம்.

இந்த அத்தியாயம் அரசு மற்றும் என்.ஜி.ஒ கூட்டு முயற்சியால் வரும் நிறை குறைகளை அலசி ஆராய்கிறது. முதலாவதாக இந்த அறிக்கை கூட்டு நடவடிக்கையின் பங்களிப்பு மனித மேம்பாட்டில் இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்கிறது. இந்திய அரசாங்கத்தில் கர்நாடக மாநிலத்தில் தான் இந்த முழுகூட்டாளி முயற்சி முதன்முதலாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்றும் கூறப்பட்டிருக்கிறது. இது சொல்கிறது:

கர்நாடக மாநிலத்தில் அரசுக்கும் NGO's இடையிலான ஆரோக்கியமான உறவு வளர்வதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய கூட்டணி ஒரு பெரிய நம்பிக்கையின் அடிப்படையில் எழுப்பப்பட்டிருக்கிறது. முரன்பாடுகளுக்கு இடையில் இந்த நம்பிக்கையை அடிப்படையாக வைத்து கர்நாடகா அரசு இக்கூட்டணியை துவக்கி இருக்கிறது.

இரண்டுவிதமான கருத்துக்கள் அது சம்பந்தப்பட்ட செய்திகளில் காண முடிகிறது. இராஜசேகர் மற்றும் பிராதர் (2004) இதனை "தயக்கத்துடன் ஆன கூட்டு முயற்சி" என பார்க்கின்றார். குத்வா (2008) இதைப்பற்றி கூறும் போது "சங்கடமானது" மற்றும் நெகிழ்வானதாக இருக்கிறது என்கிறார்.

இந்த அறிக்கையும் இந்த பிரச்சினைகள் குறித்து அலசுகிறது. இந்த விவாதங்களிலிருந்து இந்தக் கூட்டணியும் கூட்டு முயற்சியும் அப்படி ஒன்றும் சுமூகமானது அல்ல என்று சொல்ல முடிகிறது.

**அரசின் திட்டம்:** மாநிலத்தின் குழந்தை உழைப்பு ஒழிப்பு திட்டம் எஸ்.சி.எல்.பி (SCLP) அரசின் திட்டமாகும். இதன் நோக்கம் NGO's உதவியோடு கர்நாடகம் முழுவதிலும் குழந்தைத் தொழிலாளர் முறையை 2007ஆம் வருடத்திற்குள் ஒழிப்பதாகும். அரசுக்கும், NGO's இடையிலான இந்த திட்டம் மூன்று பகுதிகளாக பார்க்கப்படுகிறது. அவையாவன:

i) குழந்தைத் தொழிலாளரை கண்டறிவது, ii) அவர்களை விடுவிப்பது, iii) அவர்களை பொதுக்கல்விமுறையோடு ஒன்றிணைப்பது, இத்திட்டமானது தொழிலாளர்துறை

மூலமாக மாநிலம் முழுவதிலும் சில NGO's தேர்ந்தெடுப்பது எனத் துவங்குகிறது.

இந்தத் துறை ஒரு பொது அறிக்கையினை வெளியிடுகிறது. இரண்டு வருடம் குழந்தைத் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட வேலைகளில் அனுபவமுள்ள என்.ஜி.ஒக்களை பட்டியலிடுகிறது. இந்த என்.ஜி.ஒக்கள் மாவட்ட மற்றும் தாலுகா அளவில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு அரசின் மற்றும் எல்லாத் துறையும் குழந்தைத் தொழிலாளர்களை கண்டறிவதிலும், குழந்தைத் தொழிலிருந்து மீட்டெடுப்பதிலும், அரசுப்பள்ளிகளில் அவர்களை சேர்ப்பதிலும் என்.ஜி.ஒக்களுக்கு உதவிட எதிர்ப்பார்க்கப்படுகிறது. இதில் நான்கு வகையான அடுக்குகள் உள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் என்.ஜி.ஒக்களை தேர்ந்தெடுக்கும் போது ஒரு திட்ட இயக்குனரையும் தேர்ந்தெடுக்கின்றது. வழக்கமாக இந்த திட்ட இயக்குனர்கள் சமூகப்பணி அல்லது சட்டம் கல்விப் பின்னணி உள்ளவர்களை தேர்ந்தெடுக்கிறது. இந்த திட்ட இயக்குனர் தேர்ந்தெடுக்கப்பட்ட உடன் அவர் தன்னுடைய மாவட்டத்திலுள்ள என்.ஜி.ஒக்கள் துணையோடு ஒருங்கிணைந்த ஆய்வுக் குழந்தைத் தொழிலாளர் கணக்கெடுப்பு ஒன்றை மேற்கொண்டு அதன் மூலம் கண்டறியப்படும். குழந்தைத் தொழிலாளர்களை மீட்பார், இந்த மீட்டெடுப்பில் தொழிலாளர் துறை, காவல் துறை, கல்வி, நலம் மற்றும் சமூக நலத்துறைகள் உதவி செய்யும் என்று நம்பப்படுகிறது.

கண்டறிவதிலும் மீட்டெடுப்பதிலும் பல பிரச்சினைகள் உள்ளன. முதலாளிகளின் வெறுப்பு மற்றும் சில துறைகளின் ஒத்துழையாமை போன்றவை, உதாரணமாக சுகாதாரத்துறை இதில் பங்கெடுப்பதே இல்லை. இறுதியாக இந்த குழந்தைத் தொழிலாளர்களின் பெற்றோர்கள். இதில் விருப்பமில்லாமல் இருக்கின்றனர். கண்டறிதல் மற்றும் மீட்டெடுத்தல் என்பதில் அடிப்படையில் குழந்தைத் தொழிலாளர்களை என்.ஜி.ஒக்கள் கொண்டு வருகிறார்கள். கோலார், தாவணைகரை மற்றும் பல்லாரி ஆகிய மூன்று மாவட்டங்களில் நாங்கள் ஆய்வு மேற்கொண்டோம். கோலார் மாவட்டத்தில் குழந்தைத் தொழிலாளர்களின் முதலாளிகள் திட்ட இயக்குனரையும் அவரோடு சென்ற இரண்டு காவலர்களையும் அடித்திருக்கிறார்கள். பல்லாரி மாவட்டத்தில் சுரங்க வேலையில் ஈடுபட்டுள்ள குழந்தைத் தொழிலாளர்கள் பற்றி யாராலும் கணக்கு கூறமுடியவில்லை. சட்டத்திற்கு புறம்பான இந்த சுரங்கத்தொழிலில் ஈடுபட்டுள்ள குழந்தைகள் புலம் பெயர்ந்த குடும்பத்திலிருந்து வந்திருப்பதோடு அவர்களை பணியில் ஈடுபடுத்தியதில் உள்ளூர் அதிகாரிகளுக்கு பங்கு இருக்கிறது என தெரிய வருகிறது.

**கோலார் மாவட்டத்தில் குழந்தைத் தொழிலாளர்களின் முதலாளிகள் திட்ட இயக்குனரையும் அவரோடு சென்ற இரண்டு காவலர்களையும் அடித்திருக்கிறார்கள். பல்லாரி மாவட்டத்தில் சுரங்க வேலையில் ஈடுபட்டுள்ள குழந்தைத் தொழிலாளர்கள் பற்றி யாராலும் கணக்கு கூறமுடியவில்லை.**

தாவணைகரை மாவட்டத்தில் அரிசிப்பொரி தயாரிக்கும் தொழிலில் குழந்தைத் தொழிலாளர் பெருமளவில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதோடு அவர்களை மீட்டெடுக்கவிடாமல் உள்ளூர் அரசியல் வாதிகளின் தலையீடும் இருக்கிறது. என்.ஜி.ஒக்களையும் திட்டப்பணியாளர்களையும் அடித்து நொறுக்குவது சர்வசாதாரணமாக நடைபெறுகிறது. இருந்தபோதிலும் என்.ஜி.ஒக்கள் மீட்புப்பணிகளில் ஈடுபடுகிறார்கள். இதற்கு காரணம் அவர்களின் ஆர்வபணிப்பும் தங்கள் வேலையை செய்வதற்கான மற்றும் பிழைப்புக்கு பணம் வேண்டி இருப்பதின் காரணத்தினால், இத்தனை தடங்கல்களுக்கு இடையிலும் என்.ஜி.ஒக்கள் அரசு துறைகளின் உதவியோடு குழந்தைத் தொழிலாளர்களை வெற்றிகரமாக மீட்டெடுக்கிறார்கள். இந்த குழந்தைத் தொழிலளார்களுக்கு அதற்கான சிறப்பு மையங்களில் மறுவாழ்வு அளிக்கிறார்கள். ஒவ்வொரு என்.ஜி.ஓவும் 50 குழந்தைகளுக்கு மறுவாழ்வுப்பணிக்கு அரசு உத்தரவும் பணமும் பெறுகிறார்கள். சில என்.ஜி.ஒக்கள் குழந்தைத்தொழிலாளர்கள் மிகவும் உள்ள பகுதிகளிலோ அல்லது அந்த வகுப்பினரிடமோ அதிக கவனம் செலுத்துகிறார்கள். தொழிலாளர்கள் மற்றும் சிறுபான்மை வகுப்பினரிடையே குழந்தைத் தொழிலாளர்கள் அதிகம் காணப்படுகிறார்கள் யுக்தி மற்றும் அணுகுமுறைகளில் அரசு தேவையான சுதந்திரத்தை என்.ஜி.ஒக்களுக்கு கொடுக்கிறது. சிலர் தலித் குழந்தைகளிடமும் சிலர் சிறுபான்மை வகுப்பினரிடமும் சிலர் பெண் குழந்தைத் தொழிலாளர்களிடமும் தனிக்கவனம் செலுத்துகின்றார்கள். சில என்.ஜி.ஒக்கள் சுய உதவிக்குழு பணிகள் குழந்தைத் தொழிலாளர்களை கண்டெடுப்பதில் உதவியதாகவும் கூறுகின்றார்கள்.

மறுவாழ்வு பணி தற்காலிக விடுதிகளில் மற்றும் இணைப்பு பள்ளிகள் (Bridge School) இந்த விடுதிகள் பொதுவாக முப்பது முதல் ஐம்பது குழந்தைகளுக்கு ஏற்றவாறு உணவு, தங்குமிடம், கல்வி இவைகளை வழங்கும்.

**குறைபாடுகள்:** இந்த வகையான மறுவாழ்வுப்பணிகளில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. முதலாவது ஒரு வேளை உணவுக்கு தரப்படும் ரூபாய் ஐந்தில் ஊட்டச்சத்துள்ள உணவு கொடுக்க முடியாது என்பதோடு சாப்பாட்டுச் செலவுக்கு போதுமா என்று கேள்வி உண்டு, என்.ஜி.ஓக்கள் தங்கள் நிதி அமைப்பில் இருந்து உணவு கொடுக்க மிகவும் சிரமப்படுகிறார்கள். இரண்டாவது தங்குமிடம் குழந்தைகள் தாராளமாக புழங்குவதற்கான இட வசதி உள்ள அரங்குகள் வாடகைக்கு எடுக்கப்பட வேண்டும். ஆனால் அரசு இதுபோன்ற தங்குமிடங்களுக்கு வாடகைக்காக தருவதோ மாதத்திற்கு வெறும் ரூபாய் ஆயிரம் மட்டுமே, இந்தப்பணம் சிறிய நகரங்களான கோலார், பெல்லாரி, தாவன்கரை போன்ற இடங்களுக்குக் கூட போதாது பல என்.ஜி.ஓக்களுக்கு அவர்களுடைய சொந்த கட்டிடம் ஏதும் இருப்பது இல்லை. இறுதியாக இந்த பாலம் அல்லது இணைப்புப்பள்ளிகள் தரும் கல்வித்துறை தரும் பொருட்கள் அடிப்படையில் தான் இருக்கிறது. அந்த கல்வி உபகரணங்கள் போதுமானதாக இருப்பது இல்லை. பிறிதொரு பிரச்சினை என்ன வென்றால் மறுவாழ்வு மையங்களுக்கு வரும் குழந்தைகள் பலரும் பல்வேறு கற்கும் திறனில் உடையவர்களாக இருக்கிறார்கள். இது மேலும் சிக்கலை உண்டு பண்ணுகிறது, தொழில் கல்வி பல மையங்களில் சரியாக வழங்கப்படுவதில்லை. பெண் குழந்தைகளுக்கு தையல், உல்லன் பின்னுதல் போன்றவை மட்டுமே (கோலார் மாவட்டத்தில்) வழங்கப்படுகிறது. பிற இடங்களில் இது கூட இல்லை.

அரசு இன்னொரு பிரச்சினையில் அதிகம் கவனம் செலுத்த வேண்டும். அது என்னவென்றால் மறுவாழ்வுக்கான காலவரம்பு. SCLP அலுவலகக் கொள்கை இந்த மறுவாழ்வு மையங்களில் ஒரு வருடத்திற்கு மேல் குழந்தைகள் தங்கலாம் என்று சொல்கிறது. ஆனால் அரசு மறுவாழ்வு காலத்தை ஒரு வருடம் என நிர்ணயத்திருக்கிறது. இது மிகக்குறைந்த கால அவகாசமாகும். ஏனென்றால் ஒரு வருடத்திற்குள் ஒரு குழந்தை பள்ளிகளில் சேர்ந்து படிக்கக்கூடிய அளவிற்கு கற்கும் திறனை வளர்த்துக்கொள்ள முடியாது. என்.ஜி.ஓக்கள் அதிக காலம் தேவை என்று சொல்வதை அரசு அதிகாரிகள் என்.ஜி.ஓக்கள் தங்கள் தேவைக்காக சொல்வதாக எண்ணி சந்தேகிக்கிறார்கள். எங்களுடைய களப்பணி ஆய்வின்போது என்.ஜி.ஓக்கள் சொல்வது மிகவும் நியாயமானதாகக் தோன்றுகிறது. மறுவாழ்வுகாலம் நீட்டிக்க வேண்டியது அவசியமாகும். இந்தத் திட்டம் பெற்றிபெற வேண்டும் என்றால் அரசு தருவதை வைத்து நடத்துவது என்று இல்லாமல் என்.ஜி.ஓக்கள் தாங்களாகவே நிதி திரட்ட வேண்டியது அவசியமாகும். ஆனால் இந்த என்.ஜி.ஓக்கள் இந்த சிறிய நகரங்களில் அமைந்திருப்பதால் தங்களுக்கான கட்டுமான வசதிகள் பெற்றிருப்பது இல்லை. மேலும் நிதி திரட்டுவதற்கான வசதி வாய்ப்புகள் இல்லாதவர்களாகவும் இருக்கிறார்கள். எனவே இந்த என்.ஜி.ஓக்கள் அரசு தருகின்ற நிதி உதவியை மட்டுமே சார்ந்திருக்கிறார்கள்.

இதுபோன்று அரசை மட்டுமே நம்பி இருக்கின்ற தன்மை தரத்தை உறுதி செய்வதாக இல்லாமல் போய்விடுகின்றது. குழந்தைத் தொழில் ஒழிப்பு என்பது இப்படிப்பட்ட பின்னணியில் என்.ஜி.ஓக்களுக்கு மட்டுமல்ல அரசுக்குமே பாதி வழிப்பாதையாகி விடுகிறது. எப்படி என்றால் குழந்தைத் தொழில் பிரச்சினை என்பது ஆழமாக வேர் ஊன்றிய ஒன்றாக இருக்கும் பொழுது அரசின் முயற்சிகள் மிகக் குறைவானதாகவும், குறுகிய கால பணியாகவும் இருக்கிறது. எவ்வளவு தான் முற்போக்கு ஆனதாகவும் ஆர்வமிக்கதாயினும் இந்த திட்டத்தைப்பொருத்த வரை அரசின் அணுகுமுறை சரியானதாக இல்லை.

**குழந்தைத் தொழில் பிரச்சினை என்பது ஆழமாக வேர் ஊன்றிய ஒன்றாக இருக்கும் பொழுது அரசின் முயற்சிகள் மிகக் குறைவானதாகவும், குறுகிய கால பணியாகவும் இருக்கிறது. எவ்வளவு தான் முற்போக்கு ஆனதாகவும் ஆர்வமிக்கதாயினும் இந்த திட்டத்தைப்பொருத்த வரை அரசின் அணுகுமுறை சரியானதாக இல்லை.**

**தோல்விக்கான சூத்திரம்:** அரசின் மாநில குழந்தை உழைப்புத்திட்டத்தின் இறுதி இலக்கு குழந்தைகளை பொது பள்ளிகளில் சேர்ப்பது மற்றும் வேலை செய்வதிலிருந்து நிரந்தரமாக விடுவிப்பது ஆகும். இது எப்போது சாத்தியமாகும் என்றால் மறுவாழ்வு மையங்களிலிருந்து குழந்தைகள் ஒரு வருடத்திற்குப்பின் வெளியேறி பொதுப் பள்ளிகளில் சேர்ந்தால் தான். அந்தப் பள்ளிகளிலும் விடுதி வசதிகள் இருக்க வேண்டும். இந்த குறைந்த பட்ச புரிதல் கூட நடைமுறைக்கு எட்டாததாக இருக்கிறது. எங்களுடைய ஆய்வு அறிக்கை (ராஜசேகர், காயத்திரி தேவி மற்றும் அனில்குமார் 2007) கீழ்கண்ட ஆய்வு முடிவுகளை முன்வைக்கின்றது:

- இணைப்புப் பள்ளிகள் மற்றும் மறுவாழ்வு மையங்கள், நல்ல தங்குமிடம் மற்றும் உணவு வசதிகள் இல்லாததாக இருக்கிறது. ஆசிரியர்களின் அக்கறை மற்றும் தொடர் கண்காணிப்பு போதுமானதாக இல்லை. இங்கு என்.ஜி.ஓக்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும். அதாவது இந்த குழந்தைகளை

தக்கவைப்பதில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். (ராஜசேகர், காயத்ரி தேவி மற்றும் அனில்குமார் 2007:73–74)

- வெளியேறிய குழந்தைகள் பெரும் பகுதியினர் அதாவது 52% பொதுப்பள்ளிகளில் சேர்த்த பின்பு தான் வெளியேறி இருக்கிறார்கள். சில குழந்தைகள் பொதுப்பள்ளிகளில் விடுதி வசதி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் சேர்ந்தனர். அது கிடைக்காத போது பள்ளியிலிருந்து நின்று விட்டனர். இணைப்புப்பள்ளிகளில் பெற்ற கற்கும் திறன் பொதுப்பள்ளிகளில் தொடர்ந்து படிப்பதற்கு போதுமானதாக இல்லை. சிலப் பொதுப்பள்ளிகளில் இடம் கிடைக்க சிரமம் ஏற்பட்டபோது தனியார்பள்ளிகளில் சில குழந்தைதகள் சேர்க்கப்பட்டனர், தனியார் பள்ளிகளின் விதிகளான சீருடை, டை, ஷூ போன்றவற்றை சமாளிக்க முடியாமல் அந்த குழந்தைகள் நின்று விட்டனர். (பக்கம் 73–74)

- எங்களுடைய SCLP பற்றிய ஆய்வு இறுதியாக சிலவற்றை முன் வைக்கின்றது. பொதுப் பள்ளிகளில் குழந்தைகளை சேர்ப்பது என்பது விடுதி வசதிகளைப் பொருத்தும் விடுதியோடு கூடிய பள்ளிகள் இருப்பதையும் கணக்கில் கொள்ளப்பட வேண்டும். இணைப்புப்பள்ளிகளில் கல்விகளை முடிக்கின்ற போது விடுதி வசதி இல்லாத பட்சத்தில் திட்டம் தோல்வி அடையத்தான் செய்யும், இது மிகப்பெரிய பிரச்சினையாகும். இதற்கு தேவையானவற்றை அரசும், கல்வித்துறையும் செய்யாமல் பொதுக் கல்வியை குழந்தைகளுக்கு கொடுப்பது என்பது நீடித்த, நிலைத்த வெற்றியை தராமல் எடுக்கப்பட்ட அனைத்து முயற்சிகளும் வீணாகத்தான் போகும்.

குடும்பத்தின் வறுமை என்பது குழந்தைகளின் இடைநிற்றல் என்னும் பிரச்சினைக்கு முக்கிய காரணமாகும். அதிலும் இணைப்புப் பள்ளிகளை விட அரசுப்பள்ளிகளில் இடைநிற்றல் மிக அதிகம், SCLP திட்டத்தில் குழந்தைகளை பணியிலிருந்து மீட்டெடுப்பதும், மறுவாழ்வு அளிப்பதும் ஓரளவுக்கு வெற்றிபெற்றுள்ளது. ஆனால் பொதுப்பள்ளியில் சேர்ப்பிப்பது என்பது நாங்கள் பார்த்தவரை வெற்றிபெறவில்லை. குழந்தை உழைப்பு ஒழிப்பு திட்டங்களை SCLP போன்றவை குறைந்த அளவே நோக்கம் நிறைவெறியிருப்பதும் சமூக பிரச்சினையான இதனைத் தீர்ப்பதில் மிகக்குறைந்த அளவு தான் சாத்தியமாகி இருக்கிறது. ❑

ஆதாரம் – **Economic & Political Weekly, Jan 2011**

## சிசு மரணமும் ஆட்சியாளர் அலட்சியமும்

கிராமப் பகுதிகளில் ஆண்டுதோறும் 10 லட்சம் சிசுக்கள் பிறந்த ஒரு மாதத்திலேயே இறந்து விடுகின்றன; இதைத் தடுக்க புதிய திட்டம் ஒன்றை அமல்படுத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது. பிரசவ நேரத்தில் உடன் இருக்கும் மருத்துவ ஊழியர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் 4 டாக்டர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள். பிரசவ நேரத்தில் மேற்கொள்ள வேண்டிய முன் எச்சரிக்கை நடவடிக்கைகள், நோய் ஏற்பட்டால் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் ஆகியவற்றை உதவியாளர்களுக்கு டாக்டர் குழு கற்றுத்தரும் என்று மத்திய சுகாதாரத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

அடிப்படை சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அரசு திட்டமிடாமல், மேல்பூச்சு நடவடிக்கைகளில் மட்டுமே கவனம் செலுத்துவதால் பலன் ஏதும் ஏற்படப்போவதில்லை. குறைமாத குழந்தை அல்லது எடை குறைவான குழந்தையின் உடலில் போதிய கொழுப்புச் சத்து இருக்காது. இதனால் உடலுக்குத் தேவையான வெப்பம் கிடைக்காது. உடலில் போதிய வெப்பம் இல்லாவிடில் எளிதாக கிருமித்தொற்று ஏற்படுவதுடன், உடல் குளிர்ந்து மரணம் ஏற்படும். இது போன்ற குழந்தைகளைத்தான் 'வாமர்' அல்லது இன்குபேட்டரில் வைத்து குறிப்பிட்ட நாள் வரை பராமரிப்பார்கள். இதற்கான போதுமான வசதி அரசு மருத்துவமனைகளில் இல்லை என்பது தான் கவலைக்குரிய விஷயம்.

மகப்பேறு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளை போதிய வசதிகளுடன் விரிவாக்கம் செய்யும் நடவடிக்கைகளில் ஆட்சியாளர்கள் ஆர்வம் காட்டுவதில்லை. மாறாக, பொது சுகாதார கட்டமைப்பை தனியார்மயமாக்கும் நடவடிக்கைகளில் மட்டுமே தீவிரம் காட்டப்படுகிறது.

1991ம் ஆண்டு முதல் பின்பற்றப்படும் நவீன தாராளமயமாக்கல் கொள்கை காரணமாக நாட்டின் சுகாதாரக் கட்டமைப்பு சீர்குலைந்து கிடக்கிறது. கிராமப்புற சுகாதாரத் திட்டத்திற்கு போதுமான நிதி ஒதுக்கீடு இல்லாத நிலை தொடருகிறது. சுகாதாரத்திற்காக செயப்படும் அரசாங்கச் செலவு, மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் ஒரு விழுக்காடு அளவுக்கும் குறைவாகவே உள்ளது. இதன் காரணமாகவே சிசு மரணமும், நோயில் வாடுவோர் எண்ணிக்கையும் அதிகரிக்கிறது.

ஆதாரம் – **தீக்கதிர், 9.4.2011**

# கல்வி உரிமைச் சட்டத்தில் தமிழ்நாடு விதிகளில் சமரசம் செய்யக்கூடாதவை பற்றிய பரிந்துரைகள்

குழந்தைகளின் இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 மாதிரி விதிகள் (GOI) மற்றும் தமிழ்நாடு விதிகளில் சமரசம் செய்யக் கூடாதவற்றை பரிந்துரைப்பது குறித்த சென்னை மாவட்ட அளவிலான பயிற்சிப் பட்டறை யூனிசெப் ஆதரவுடன் சென்னை, எக்மோரிலுள்ள இக்சா மையத்தில் 2010, 30 நவம்பர் மற்றும் 1 டிசம்பரில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் சென்னையைச் சேர்ந்த கல்வியாளர்கள், பேராசிரியர்கள், பெண்கள் மற்றும் மாணவர் அமைப்புப் பிரதிநிதிகள், தன்னார்வத் தொண்டு நிறுவன இயக்குநர்கள் மற்றும் செயல்பாட்டாளர்கள் உள்ளிட்ட சுமார் 90 பேர் கலந்துகொண்டனர்.

**30–11–2010 அன்று தமிழ்நாடு அரசினால் வெளியிடப்பட்ட வரைவு விதிகளின் மீதான விமர்சனங்களும் இரண்டு நாள் நிகழ்வுக்குப்பின் தமிழக அரசுக்கு தெரிவிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட தீர்மானங்கள்.**

- முதலாவதாக இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் தமிழ்நாடு விதிகள் தமிழ்நாடு அரசால் 30.11.2010 அன்று இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளதை பொதுமக்கள் விவாதித்து கருத்துத் தெரிவிக்க 90 (தொன்னூறு) நாட்களாவது தேவை. டிசம்பர் 20, 2010க்குள் தெரிவிக்க வேண்டும் என்று சொல்வது ஜனநாயக மரபுக்கு முரணானது ஆகும். பொது மக்களிடம் ஒரு குறிப்பாணை பற்றி கருத்துத் தெரிவிக்கவே 60 நாட்கள் தரப்படுவதுண்டு. அதிலும் மாவட்ட அளவில் பல்வேறு தரப்பட்ட மக்களிடம் ஆலோசனைக் கூட்டம் நடத்தி விதிகள் பற்றி கருத்துக்களை கேட்க வேண்டியது தமிழக அரசின் கடமையுமாகும். எனவே நாட்கள் நீட்டித்தர வேண்டும் என்று கூட்டத்தில் தீர்மானிக்கப்படுகிறது.
- சட்டத்தில் உள்ளூர் அமைப்புகள் என்று குறிப்பிடப்பட்டிருப்பது அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளான பஞ்சாயத்து, முனிசிபல் மற்றும் கார்ப்பரேசன் போன்றவற்றைக் குறிப்பது. இவைகளை எடுத்துவிட்டு உள்ளூர் கல்வி அதிகாரிகள் என்று தமிழ்நாட்டு விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை ஒதுக்கிவிட்டு அரசு அதிகாரிகளை மையப்படுத்துவது கூடாது. ஜனநாயக அமைப்பை உதறிவிட்டு அதிகார அமைப்புக்கு வித்திடுவதாகும் இது.
- தாய் மொழி வழிக் கல்வி என்பது 8ம் வகுப்பு வரையிலாவது என்றிருக்க வேண்டும். உள்ளாட்சி அமைப்புகளுக்கு கண்காணிக்கும் அதிகாரமும் நிதி ஆதாரமும் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.
- பள்ளி வரைபடத்தில் 6 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளை கண்டறிவது போன்றே 0–3 வயது மற்றும் 3–6 வயது குழந்தைகளையும் கண்டறியப்படுவதும் அவசியம். 3 முதல் 6 வயது குழந்தைகளுக்கு இந்தப் பள்ளியிலேயே முன் பருவக் கல்விக்கு ஏற்பாடு செய்தல் அவசியம். மேலும் இதை நடத்தும் தனியார் பள்ளிகளுக்குத் தடை விதித்தல் வேண்டும்.
- இலவசக் கட்டாய கல்வி என்பதோடு தரமான கல்வி உரிமை என்பது உறுதி செய்யப்பட வேண்டும் என்பது மிக முக்கியம். முறையீட்டுக்குழு என்பது மாநில அளவில் மட்டுமல்லாமல் மாவட்ட அளவிலும் செயல்படுத்தப்பட வேண்டும். இது சட்டத்தில் இருந்தாலும் தமிழ்நாடு விதிகளில் முழுவதுமாக நீக்கப்பட்டிருக்கிறது. மாநில ஆலோசனைக்குழு தமிழ்நாடு விதிகளில் கூறப்பட்டிருந்தாலும் கீழ்நிலை அதுபற்றி யோசிக்கவில்லை. இவற்றிலும் ஓய்வு பெற்ற கல்வி அதிகாரிகள் போல் தோன்றுகிறது மக்களால் தேர்ந்தெடுக்க பிரதிநிதிகள் இருப்பதாய் தெரியவில்லை
- தனியார் பள்ளிகளில் 25% ஒதுக்கீடு என்பதும் அது தவறினால் தண்டனை என்ன என்பது தெரிவிக்கப்படாததோடு அதற்கான கட்டணத்தை அரசே அப்பள்ளிகளுக்கு திரும்பத்தரும் முறை தவறானதாகும்.
- தமிழ்நாடு விதிகளில் ஏற்கனவே இருந்த நல்ல பல கல்விச் சட்டங்கள் என்னவாகும் என்பது பற்றி ஏதுமே கூறப்படவில்லை. அடுத்த கல்வி ஆண்டிற்குள்ளாவது தமிழ்நாடு அரசினால் மாநில அளவிலான குழந்தை உரிமை பாதுகாப்புக் கமிஷன் ஏற்படுத்தப்பட வேண்டும்.
- இச்சட்டத்தை நடைமுறைப்படுத்த தேவையான நிதி ஆதாரம் பற்றி பேசப்படாதது பெருங்குறை ஆகும்.
- உடல் ரீதியான தண்டனை சட்டத்தில் தடை செய்யப்பட்டிருப்பது போலவே பாலியல் துன்புறுத்தலுக்கு கவனம் செலுத்தப்பட வேண்டியதும் பள்ளி அளவில் அதை செய்ய இடமளிக்கப்பட வேண்டும். ஆசிரியர்களின் தகுதி மேம்பாடு பற்றி சட்டத்தில் தெளிவாகச் சொல்லப்படாதது பெரும் குறையாகும்.

முன்னதாக இந்த மாநாட்டில் கருத்துரையாற்றிய கல்வியாளர் திரு.எஸ்.எஸ்.ராஜகோபாலன் அவர்கள், “ஆங்கிலக் கவிஞர் ஷெல்லி பற்றி இவ்வாறு சொல்லப்படுவதுண்டு. அழகான பறவை ஒன்று வெற்றிடத்தில் தன் சிறகை அடித்துக் கொண்டிருக்கிறது என்று மதிப்பு வாய்ந்த அக்கவியை யாரும் பொருட்படுத்தவில்லை என்பதற்காக அவ்வாறு சொல்லப்பட்டது. இலவச கட்டாயக் கல்வியை பொறுத்தவரையில் நாமும் அது போலத்தான் சொல்ல வேண்டி உள்ளது”.சட்டம் மட்டுமே போதாது சட்டத்தை நடைமுறைபடுத்த விதிகள் வேண்டும். சட்டத்துக்கு உயிர் கொடுப்பதே விதிகள் தான்.

**இந்தச் சட்டத்தில் தெளிவுபடுத்தி சரி செய்யப்பட வேண்டியவை:** முதலாவதாக பள்ளி வரைபடம். பள்ளி வரைபடம் இருந்தால்தான் பள்ளி எங்கெங்கு இருக்கிறது எங்கெங்கு இல்லை என்பதைக் கண்டறிய முடியும், ஆனால் பள்ளி ஓரிடத்தில் தேவை என்பதை யார் நிர்ணயிப்பது. எஸ்.எஸ்.ஏ. பள்ளி என்றால் அங்கே குழந்தைகள் பற்றிய சென்சஸ் இருக்கும். வீட்டுக்கு வீடு சென்று பள்ளியில் சேரும் வயதில் பிள்ளைகள் இருப்பது கண்டறியப்படும். ஆனால் இதில் பெரும் பிழை ஏற்படுவது எப்படி என்றால் வீடு இல்லாத குழந்தை பற்றிய விபரம் இருக்காது. அதேபோல் புலம் பெயர்ந்த குடும்பத்து குழந்தையின் விபரமும் புள்ளி விவரக் கணக்கெடுப்பில் வருவதில்லை. அடுத்ததாக உள் கட்டமைப்பு வசதி பற்றி மாதிரி விதிகளில் சாரமற்ற வகையில் கொடுக்கப்படுள்ளது. முன்னர் இயற்றப்பட்ட சட்டத்தின் கட்டமைப்பு விதிகள் கடுமையாகப் பின்பற்றப்பட்டது. குழந்தைகளுக்குத் தெரியக்கூடிய அளவுக்கேற்ப பக்கத்தின் ஆரம்ப வரிகளும் கடைசி வரிகளும் முழுமையாகத் தெரிவதற்குதான் சாய்வு மேசை ஆகும். அதே போலத்தான் கழிப்பிட வசதியும். எத்தனை குழந்தைகட்கு எத்தனை சதுர அடி என்று விரிவாகப் பேசப்பட்டுள்ளது. எல்லா அரசு மற்றும் தனியார் பள்ளி முழுவதிலும் ஒரே கட்டமைப்பு விதிகள் பின்பற்றப்பட்டது. ஆனால் பின்னர் அரசுப் பள்ளிகளுக்கு விலக்கு அளிக்கப்பட்டுவிட்டது. அரசுப் பள்ளிகளின் தரம் தாழ்ந்து போனது இப்படித்தான்.

எல்லாப் பள்ளிகளிலும் குடிநீர் என்பது அவசியம் குடிநீர் என்றால் பாதுகாப்பான குடிநீர் என்பதுதான் பொருள். அதுதான் அத்தியாவசமானதும் கூட, இந்த சட்டத்தில் அரசு நிர்வகிக்கும் பள்ளிக்கும் உள்ளாட்சி நிர்வகிக்கும் பள்ளிக்கும் ஒரே பொறுப்பு உள்ளது போல் உள்ளது. ஆனால் பொறுப்பை யார் ஏற்பார்கள் ? என்பதைப் பற்றிய தெளிவு தேவை. அதேபோல வயதுக்கு ஏற்ற வகுப்பில் சேர்க்க கடமை இருக்கிறது. ஆனால் குழந்தைக்கு bridge course அல்லது திறன் வளர்க்கும் கல்வி கொடுக்க யார் பொறுப்பேற்பது. பள்ளிச் சேர்க்கைக்கு தேர்வுகள் கூடாது. சரி, ஆனால் இதை தணிக்கை செய்வது யார் ? ஒசூரில் ஒரு பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளியில் சேர்க்கைக்காக முதல் நாள் இரவு முதலே காத்துக் கிடக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையை எப்படி சமாளிப்பது ? சமீபத்திய தீர்ப்பு ஒன்றில் (இம்மாதிரியான சூழலில் பள்ளிச் சேர்க்கையில்) குலுக்கல் முறையை பின்பற்ற அறிவுறுத்தப்படுகிறது. தனியார் பள்ளிகளில் நலிவுற்ற பிரிவு குழந்தைகளுக்கு 25% சதவீதம் ஒதுக்கீடு செய்வது என்பதை தேர்ந்தெடுப்பது யார் ? உள்ளூர் அரசாங்கம் என்றால் தேர்ந்தெடுக்கும் முறை என்னவாயிருக்க வேண்டும். பள்ளி சேர்க்கையை தணிக்கை செய்வது யார் பொறுப்பு ?

பள்ளி நிர்வாகக் குழுவை எப்படி நிர்ணயிப்பது ? விதி முறைகள் சொல்வதென்ன விதிமுறை யாவற்றையும் எல்லோருக்கும் எப்படி தெரிவிப்பது ? ஆசிரியர் மாணவர் விகிதாச்சாரம் எப்படி இருக்க வேண்டும் ? வகுப்புக்கொரு ஆசிரியர் என்றால் எத்தனை மாணவர்கட்கு ஒரு ஆசிரியர் ? உதாரணமாக 1:30 என்றால் 31 மாணவர் வந்ததும் வகுப்பை இரண்டாகப் பிரிக்கும் அதிகாரம் யாருக்கு இருக்கிறது ? என்பது பற்றியெல்லாம் இந்த விதிகளில் குறிப்பிடப்படவில்லை. முன்பெல்லாம் 3 வகுப்பு வரை நிறுத்தக்கூடாது என்றிருந்தது. தற்போது எட்டாம் வகுப்பு வரை கூடாது என்கிறது சட்டம் ஆனால் பிற நாடுகளில் இதற்கு முன்னரே அவ்விதம் இருக்கிறது. பிற நாடுகளில் வயதுக்கும் வகுப்புக்கும் தொடர்பிருக்கிறது. வயதை வைத்து வகுப்பை சொல்லி விடலாம். வகுப்பை வைத்து வயதை சொல்லி விடலாம். நிறுத்தி வைப்பது (Retention) என்பதில் சேதாரம் குழந்தைக்கு மட்டுமல்ல நாட்டுக்கே, சமூகத்திற்கே பொருளாதார சேதாரம் ஆகும். கற்பித்தலுக்கு technology என்ன ? தரத்தை உறுதி செய்வது எப்படி ? தண்டனை என்பது ரத்து செய்யப்பட்டிருக்கிறது. இந்த சட்டத்தில் தண்டனை என்றால் என்ன ? உடல் ரீதியான, உள ரீதியான மற்றும் உணர்வு ரீதியாக தாக்குதல் என்று பொருள் கொள்ளலாம்.

பள்ளி இச்சட்டத்திற்கு இணங்காத போது பள்ளி அங்கீகாரம் ரத்து செய்யப்படும். அப்படி அங்கீகாரம் ரத்தாகும் போது அங்கு பயின்ற அத்தனை குழந்தைகளும் எங்கே போவார்கள் ? அங்கு வேலை செய்த ஆசிரியர்கள் எங்கே போவார்கள். நம் மாநில அரசின் மாதிரி விதிகளில் அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று வலியுறுத்த வேண்டும். நிதி ஆதாரம் பற்றி சட்டமும் சரி மாதிரி விதிகளும் சரி எதுவும் சொல்லாமல் அமைதி காக்கின்றன. நாம் விமர்சனம் செய்யும் போது கல்வி வரி மூலம் ஒவ்வொரு குழந்தைக்கும் கிடைக்க வழி செய்ய வேண்டும். ஏற்கனவே நமக்கு முன் உள்ள ஆரம்பக் கல்வி விதிமுறைகள், கல்வி மானிய அறிக்கை, ஆய்வுக் கோவை போன்றவைகளை முன் மாதிரியாய் கொண்டு அரசு மாறுதல்கள் கொண்டு வர வேண்டும் என்று நாம் அரசை நிர்பந்திக்க வேண்டும்.

தனியார் பள்ளிகளுக்கு அங்கீகாரம் பெறும்போது என்னென்ன பார்க்கப்பட வேண்டும் என்று நீதிபதி சம்பத் குழு சொன்னதை எல்லாம் அரசுப் பள்ளிகளுக்கு கட்டாயமாக்கப்பட வேண்டும் என்று நாம் கேட்க வேண்டும். எல்லா கட்டணமும் அல்லது கட்டணங்கள் யாவும் என்று ஒரு வரையறை இருந்தால்தான் அது ஒரு வரம்புக்குள் வரும். பள்ளி மேலாண்மைக்குழு தனியார் பள்ளிகளில் இல்லை, அதை எவ்வாறு கண்காணிப்பது. அதே மாதிரி தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் மற்றும் விதிகள் மற்றும் அறிவிப்பாணைகளின்படி ஊராட்சிகளுக்கும், தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம், விதிகள் மற்றும் அறிவிப்பானைகளின்படி நகராட்சிகளுக்கும் இதுவரை அரசியல் சாசன சட்டத்தில் குறிப்பிட்டுள்ள எந்த ஒரு அதிகாரமும் முழுமையாக வழங்கப்படவில்லை. ஆனால் இந்த கல்வி உரிமைச் சட்டத்தில் அவர்களுக்கு பொறுப்பு மட்டும் அளிக்கப்பட்டிருக்கிறது என்று கூறி முடித்தார் திரு.ராஜகோபாலன்.

---

**கேரளாவில் முக்கியமாக அருகாமைப் பள்ளி பற்றி ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரை 1 கி.மீட்டர் உட்படவும் ஐந்து முதல் 8 வரை 3 கி.மீட்டர்க்கு உட்பட இருக்க வேண்டும் என்றும் முடியாத பட்சத்தில் இலவச போக்குவரத்து வசதி செய்து கொடுக்க அரசு கடமைப்பட்டிருக்கிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. சிக்கிம் விதிகளின்படி 10 முதல் 30 குழந்தைகள் இருந்தால் பள்ளி திறக்கப்பட வேண்டும். இல்லையெனில் இலவச பஸ் வசதி தரப்பட வேண்டும். ஆந்திராவில் ஊனமுற்ற குழந்தைகளுக்கு இலவச பஸ் வசதியும் தீவிர ஊனம் உள்ள குழந்தைகளுக்கு வீட்டிற்கே வந்து கற்பிக்க விதிமுறை வகுக்கப்பட்டுள்ளது.**

---

இலவசக் கட்டாய கல்வி உரிமைச் சட்டம் 2009 பற்றி அறிமுகம் செய்த முனைவர் சண்முகவேலாயுதம், “இந்தச் சட்டம் குழந்தைகளின் இலவசக் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 என்று அழைக்கப்படுகிறது. இது மாதிரி விதிகளை உள்ளடக்கியது என்றாலும் நடைமுறைக்கு வந்தது 1 ஏப்ரல் 2010ல் இருந்துதான் எல்லா மாநிலங்களிலும் (ஜம்மு காஷ்மீர் தவிர்த்து தான் இந்த சட்டத்தின் கீழ் 6 வயது முதல் 14 வயது வரை எல்லா குழந்தைகளுக்கும் இதில் உரிமை உண்டு. ஊனமுற்ற குழந்தைகளுக்கும் இதில் உரிமை உண்டு இச்சட்டத்தை செயல்படுத்துவதற்கான மாதிரி விதிமுறைகளை நடுவண் அரசு தயாரித்து வெளியிட்டுள்ளது. அதனை அடிப்படையாகக் கொண்டு மாநில அரசுகள் இச்சட்டத்திற்கான விதிகளை உருவாக்கி வருகின்றன. நம் தமிழக அரசு மிகத் தாமதமாக விதிகளை உருவாக்கியது.

தொடக்க கல்வி என்பது முதல் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரையாகும். வயதுக்கு ஏற்ற வகுப்பில் சேர உரிமை உதாரணமாக 8 வயது ஒரு குழந்தை என்றால் மூன்றாம் வகுப்பில் சேர அக்குழந்தைக்கு உரிமை உண்டு. சிறப்பு பயிற்சி கொடுக்க உரிமை உண்டு. சிறப்பு பயிற்சி. வேறு பள்ளியில் சேர மாற்றுச் சான்றிதழ் பெற உரிமை உண்டு. பெற்றோர், உள்ளாட்சி மற்றும் உரிய அரசாங்கத்தின் கடமைகள் பற்றியும் சட்டம் சொல்கிறது. 2002 சட்டத்திற்கு முன்பு சட்டத் திருத்தம் வந்தது. சட்டத்திற்குள் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகள் நான்கு வகையாகும். 1. அரசு நடத்தும் பள்ளி, 2. அரசு உதவி பெறும் பள்ளி, 3. சிறப்பு வகை பள்ளிகள் (உம். நவோதயா, சைனிக் பள்ளிகள்), 4. அரசு உதவி பெரும் தனியார் பள்ளிகள்

**இச்சட்டத்தில் தரமான கல்வி என்பது பேசப்படவில்லை.**

வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினர் மற்றும் நலிந்த பிரிவினருக்கு 25% ஒதுக்கீடு தனியார் பள்ளிகளில் உண்டு. இச்சட்டம் நடைமுறைக்கு வந்தபின்அங்கீகாரம் இல்லாமல் எந்தவொரு பள்ளியும் செயல்படக்கூடாது. ஒவ்வொரு பள்ளியிலும் மேலாண்மைக்குழு என்று ஒரு குழு நிறுவப்பட வேண்டும். அதில் 75% பெற்றோர் அல்லது பாதுகாப்பாளர் மற்றும் நலிந்த பிரிவினர் விகிதாச்சார முறைப்படி பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும். ஆசிரியர் கடமைகள் பற்றி சட்டம் விரிவாகச் சொல்கிறது. மேலும் கடமையிலிருந்து தவறும் ஆசிரியர்களுக்கு தண்டனை கூறப்பட்டள்ளது. அதாவது பொருத்தமான பணி விதிகளின் கீழ் நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார் என்று கூறினார். பின்னர் பல்வேறு மாநிலங்களின் மாதிரி விதிகளைப் பற்றிப் பேசும் போது “மாதிரி விதிகளை உருவாக்கி அரசிதழ்களில் சிக்கிம், ஹரியானா அருணாச்சலப் பிரதேச மாநிலங்கள் வெளியிட்டுள்ளன. அரசிதழ் எனில் Government Notification ஆகும். ஆந்திர பிரதேசம் போன்ற மாநிலங்களில் விதிகளை உருவாக்கியதோடு பொது மக்கள் கருத்தும் கோரப்பட்டிருக்கிறது. கேரளாவில் முக்கியமாக அருகாமைப் பள்ளி பற்றி ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரை 1 கி.மீட்டர் உட்படவும் ஐந்து முதல் 8 வரை 3 கி.மீட்டர்க்கு உட்பட இருக்க வேண்டும் என்றும் முடியாத பட்சத்தில் இலவச போக்குவரத்து வசதி செய்து கொடுக்க அரசு கடமைப்பட்டிருக்கிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. சிக்கிம் விதிகளின்படி 10 முதல் 30 குழந்தைகள் இருந்தால் பள்ளி திறக்கப்பட வேண்டும். இல்லையெனில் இலவச பஸ் வசதி தரப்பட வேண்டும். ஆந்திராவில்

ஊனமுற்ற குழந்தைகளுக்கு இலவச பஸ் வசதியும் தீவிர ஊனம் உள்ள குழந்தைகளுக்கு வீட்டிற்கே வந்து கற்பிக்க விதிமுறை வகுக்கப்பட்டுள்ளது. நலிவுற்ற பிரிவு குழந்தைகட்கு தனியார் பள்ளிகளில் 25% சேர்ப்பது பற்றி ஆந்திர அரசு விவரமாகச் சொல்கிறது. எஸ்டி மற்றும் எஸ்சி குழந்தைகளுக்கு ஆண்டு வருமானம் ரூ.60000க்கு குறைவான குடும்பத்தை சேர்ந்த அனைத்து குழந்தைகட்கும் என்று சொல்கிறது. கேரள அரசு விதிகளில் திருநங்கைகள் (Transgender) குழந்தைகள் பற்றியும் இணைத்துள்ளார்கள். திருநங்கைகள் (Transgender) என்பது 14 வயதுக்கு மேல்தான் தெரியும் என்று ஒரு சிலர் சொன்னாலும் திருநங்கைகள் பற்றி குறிப்பிடப்பட்டிருப்பது முக்கிய விசயம். பாரம்பரிய மீனவக் குழந்தைகள் பற்றி கேரள அரசு விதிகளில் காண முடிகிறது. தமிழ்நாட்டு விதிகளிலும் இதனை கொண்டு வரலாம். மேற்சொன்ன வகுப்பினரை கொண்டு பூர்த்தி செய்ய முடியாமல் போகின்ற பட்சத்தில், நலிந்த பிரிவினர் என்ற பிரிவை விரிவுபடுத்திப் பார்க்கவும் வழியிருக்கிறது. விதிகளைத் தளர்த்தி சேர்க்கையை அனுமதிக்கவும் நாம் விதிகள் விதிக்கலாம். தகுதி வாய்ந்த ஆசிரியர்களை நியமனம் செய்ய உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது.

பள்ளி அங்கீகாரம் பெறாமல் எந்த ஒரு தனியார் பள்ளியும் நிறுவப்படவோ செயல்படவோ கூடாது. தலைமை ஆசிரியர் நியமனம் பற்றி கேரள அரசு 12 ஆண்டுகள் ஆசிரியப்பணி ஆற்றிய அனுபவம் தேவை என்கின்றது. பள்ளிச் சேர்க்கை பற்றி நடுவணரசு மாதிரி விதிகளின்படி பள்ளித் துவக்க நாளிலிருந்து 6 மாதம் வரை சேர்க்கலாம். ராஜஸ்தான் அரசு நிர்வாகக்குழு உறுப்பினர் அனைவரும் பெற்றோரே இருக்க வேண்டும் என விதிக்கிறது. ஒரிசா அரசு நிர்வாகக்குழு மூன்று வருடத்திற்கு ஒருமுறை மாற்றி அமைக்கச் சொல்கிறது. டெல்லி அரசு கூறுவதன் படி நிர்வாகக்குழு உறுப்பினர் 12 பேர் என்றும் அதில் ஆறு பேர் பெண்களும் இருக்க வேண்டும். கர்நாடகா அரசு பிரதிநிதித்துவ உறுப்பினர் எண்ணிக்கை பற்றி சொல்கிறது. 150 குழந்தைகட்கு 9 உறுப்பினர் என்றும் 400 குழந்தைகளுக்கு 15 உறுப்பினர் என்று வழிவகைகளைச் சொல்லுகிறது என்று விளக்கமாகக் கூறினார்.

இறுதியாக, ''இதற்கு முன்னர் பெற்றோர்க்கு உரிமை இல்லை. இச்சட்டத்தின் மூலம் பெற்றோர்க்கு உரிமை உண்டு. மேலாண்மைக் குழு 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை மாற்றி அமைக்க நாமும் கோரலாம். ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு ''மாநில குழந்தை உரிமை பாதுகாப்பு ஆணையம்'' அமைக்கப்பட வேண்டும் என்று கூறினார்.

**இறுதியாக சட்டத்தின் வீச்சு சரியாக பயன்படுத்தப்பட செய்ய வேண்டியவை:**

1. ஒவ்வொரு ஒன்றிய (Block) வாரியாக எல்லா தரப்பினருக்கும் பயிற்சி அளித்தால் பெற்றோர், ஆசிரியர், தலைமை ஆசிரியர் என எல்லோருக்கும் இச்சட்டம் பற்றிய விழிப்புணர்வு கிடைக்கும். அந்த பகுதியிலுள்ள என்.ஜி.ஓக்கள் அதற்கு பொறுப்பேற்கலாம்.
2. மாற்றுச் சான்றிதழ் மற்றும் பிறப்புச் சான்றிதழ் பற்றி இச்சட்டத்தில் கூறப்பட்டுள்ளது போன்று செய்து குழந்தை உரிமையை உறுதி செய்யலாம்.
3. குழந்தைத் தொழிலாளர்களை கண்டறிந்து பள்ளியில் சேர்க்க, வயதுக்கேற்ற கல்வி கிடைக்க முயற்சிக்கலாம். திறன் வளர்க்கும் கல்வி (bridge course)க்கு ஏற்பாடு செய்யலாம். கல்வி நுட்ப ஆலோசகர்கள் மூலம் bridge course நடத்த ஆசிரியருக்கு பயிற்றுவிக்கலாம்.
4. அரசு அங்கீகாரம் பெற்று பள்ளி செயல்படுகிறதா என்று கண்காணிக்கலாம். இல்லாத பட்சத்தில் புகார் அளிக்கலாம்.
5. அவ்வப்போது ஊடகங்களுக்கு செய்திகள் அனுப்பலாம்.
6. குழந்தைகளை வகுப்புகளிலேயே தங்க வைக்கிறார்களா எனக் கண்காணிக்கலாம்.
7. பள்ளி வரைபடம் தயாரிப்பினில் பங்கேற்கலாம்.
8. பள்ளி மேலாண்மைக் குழு முறைப்படி செயல்படுகிறதா என கண்காணிக்கலாம்.
9. 25% ஒதுக்கீடுகள் எஸ்சி / எஸ்டி மற்றும் நலிவுற்ற பிரிவினருக்கு செல்கிறதா என மேற்பார்வையிடலாம்.
10. மாணவர்களின் கற்றல் திறன் மேம்பாடு அடைகிறதா எனக் கண்காணிக்கலாம்.
11. தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் மூலம் பிளாக் (block) வாரியாக மாணவர் ஆசிரியர் விகிதாச்சாரத்தை கேட்டுப் பெறலாம்.
12. 150 குடும்பத்துக்கு ஒரு பள்ளி கொண்டு வர அரசை நிர்பந்திக்கலாம்.
13. எல்லாப் பள்ளிகளிலும் பெற்றோர் ஆசிரியர் கழகம் இருந்ததைப் போல் அல்லாமல் மாணவர்களில் பெற்றோர் / பாதுகாவலர் 75 சதவீதம் உள்ளனரா எனப் பார்க்கலாம்.
14. ஒவ்வொரு மாவட்ட அளவிலும் தனியார் பள்ளிகளுக்கு புதிய அங்கீகாரம் கொடுக்காமலிருக்க அரசை நிர்பந்திக்கலாம்.
15. எல்லாப் பள்ளிகளிலும் தாய் மொழி வழிக் கல்வி நடைபெற அரசுக்கு நிர்பந்திக்கலாம்.

இந்தக் கலந்துரையாடலில், தாமஸ் ஜெயராஜ், ஆசிபெர்ணான்டஸ், வர்ஜில் டி' சாமி, தேவநேயன் ஆகியோர் கலந்து கொண்டு பல்வேறு அமர்வுகளுக்கு தலைமை தாங்கி வழிநடத்தினர். ❑

**– 2010 டிசம்பர் 1 மற்றும் நவம்பர் 30 நடைபெற்ற குழந்தைகளின் இலவச கட்டாய கல்வி உரிமைச் சட்டம் 2009 மாதிரி விதிகள் (இந்திய அரசு) பற்றிய சென்னை மாவட்ட நிகழ்ச்சி / பட்டறையில் வெளியான ஒருமித்த முடிவுகள்**

# ஜார்க்கண்ட்: பிழைப்பிற்காக எலிப் பொந்துகளுக்குள் உழலும் குழந்தைகள் அறிவியல்பூர்வமற்ற சுரங்கங்களில் வேலை; உயிருக்கு ஆபத்தான பணி முறைகள்

–இப்சிடா பாடி

**ராம்கார்ட்:** ஜாவிர் குமார், சட்டவிரோத நிலக்கரிச் சுரங்கங்களில் வேலை செய்கிற 14 வயதுச் சிறுவன். 10க்குப் 10 அடி அகலமும் 400 அடி ஆழமும் உள்ள ஒவ்வொரு சுரங்கமும் ஒரு எலிப் பொந்து போலத்தான் இருக்கிறது. கால் சற்றே சருக்கினாலும் மரணம் நிச்சயம்.

ஜார்க்கண்ட் மாநிலத்தின் ஹஜாரிபாக் மாவட்டத்தில் அறிவியல்பூர்வமற்ற முறையில் கட்டப்பட்டுள்ள இப்படிப்பட்ட சுரங்கங்களில் 14 வயதுக்கு உட்பட்ட ஏராளமான குழந்தைகள் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். இந்த சுரங்கத் தொழிலாளர்கள் பெரும்பாலும் ஒரிஸா, மேற்கு வங்கம், பீகார், சத்திஷ்கர், அஸ்ஸாம் மாநிலங்களிலிருந்து வந்தவர்களாவர்.

இங்கெல்லாம் நிலக்கரி தோண்டி எடுக்கப்படும் வழிமுறைகள் கிலியை ஏற்படுத்துவதாகவும் சிக்கலானதாகவும் இருக்கின்றன என்று என்கிறார் ஜாவிர் குமார். நிலக்கரியைத் தோண்டுவதற்காக இரும்புக்கம்பிகள் நெருப்பில் புடமிடப்பட்டு கூர் தீட்டப்படுகின்றன. ஒவ்வொரு ஐந்து நிமிடத்திற்கும் ஒருமுறை ஒரு மர வாளி நிறைய நிலக்கரி பொந்திலிருந்து வெளியே எடுக்கப்பட்டு வெளியே கொண்டுவரப்படும். வெளியே, குவாரியின் அருகில் கொட்டிவைக்கப்பட்டு, பின்னர் லாரி மூலம் கொண்டுசெல்லப்படும். ஒவ்வொரு நாளும் ஒரு குழந்தை சராசரியாக 30 – 40 வாளி நிலக்கரியை தோண்டியெடுத்துக் கொண்டுவரவேண்டும்.

மேலும் மேலும் அதிகரித்து வரும் இத்தகைய சுரங்கங்களை உள்ளே நிர்வகிப்பவர்களும் 7 முதல் 17 வயது வரையிலான குழந்தைகள்தான். 1952ஆம் ஆண்டின் சுரங்கச் சட்டம் 18 வயதுக்குக் கீழுள்ளவர்களை சுரங்கப் பணிகளில் ஈடுபடுத்தக்கூடாது என்று கூறுகிறது. வேலையில் நியமிக்கப்படுவதற்கான குறைந்தபட்ச வயது 14 என தொழிலாளர் சட்டம் கூறுகிறது.

இந்தத் தொழிலாளர்கள் காலையில் 5 மணிக்கே தங்களுடையே பணிகளைத் தொடங்குகிறார்கள். சுரங்கத்திலிருந்து அவர்கள் வெளியே வருகிறபோது இருட்டிவிடும். அதன் பின் அவர்கள் மது அருந்துவதிலும் சூதாடுவதிலும் ஈடுபடுகிறார்கள்.

இந்தச் சுரங்கங்களில் ஏற்படக்கூடிய விபத்துகள் பதிவு செய்யப்படுவதே இல்லை. இதனால், விபத்தில் யாரேனும் உயிரிழந்தால் அவர்களது குடும்பத்தினருக்கு எவ்வித இழப்பீடும் கிடைப்பதில்லை என்கிறார் சோட்டா மாஜி.

“உள்ளே நிஜமாகவே இருட்டாக இருக்கும். முதல் தடவை நான் உள்ளே போனபோது பயந்துவிட்டேன். வெளியே வருவேனா என்பதே எனக்கு சந்தேகமாகிவிட்டது,” என்று முதல் நாள் அனுபவத்தை நினைவுகூர்கிறார் பூல் குமாரி. “சுரங்கத்திற்குள் வழியைக் கண்டுபிடிக்க நாங்கள் எல்லோரும் ஒரு எண்ணெய் விளக்கைப் பயன்படுத்துகிறோம்,” என்றும் அவர் கூறினார்.

எப்போதும் தூசு, நிலக்கரித் துணுக்குகள் நடுவிலேயே இருப்பதால், இக்குழந்தைகளுக்கு எளிதில் சுவாசக் கோளாறுகள் ஏற்படுகின்றன. ஆரம்ப சுகாதார நிலையம் என்று அருகாமையில் எதுவும் கிடையாது.

பருகுவதற்குத் தூய்மையான குடிநீரும் கிடையாது. 600 பேர் உள்ள இடத்தில் ஒரே ஒரு அடி குழாய்தான் இருக்கிறது. குடிநீர்ப் பற்றாக்குறை காரணமாக இத்தொழிலாளர்கள் சுரங்கத்தில் நிரம்பியிருக்கும் தண்ணீரையே பயன்படுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

**அடிக்கடி நேரும் மரணங்கள்:**

இப்பகுதியில் குடியிருப்பவரான பசந்தி தேவி, “இங்கே மரணம் எப்போதும் கண்ணாமூச்சி விளையாட்டு விளையாடிக்கொண்டுதான் இருக்கும்,” என்றார். நிலக்கரி தோண்டி எடுக்கப்பட்ட பிறகு, இடைவெளிகள் முறைப்படி நிரப்பப்படுவதில்லை. இதனால் அடிக்கடி சுரங்கத்திற்குள் மண் சரிவு ஏற்பட்டு அதனால் மரணங்களும் அடிக்கடி நிகழ்கின்றன என்றார் அவர்.

“எந்த ஒரு சாவு பற்றியும் போலிஸ்காரர்கள் எந்த விசாரணையும் நடத்துவதில்லை,” என்றார் அவர். இவர்களது குழந்தைகளை ஏன் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பவில்லை ? பட்டென்று பதில் வருகிறது: “வறுமைதான்.” இங்கு குழந்தைத் தொழிலாளர்கள் எண்ணிக்கை மிக அதிகமாக இருப்பதால், குழந்தைகளுக்கு எதிரான குற்றச்செயல்களும் மிக அதிகம்தான்.

ஜார்க்கண்ட் மாநில அரசு இந்த மக்களுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின் கீழ் எவ்வித பலன்களையும் அளிப்பதில்லை.

“இந்தச் சட்டம் வசதி உள்ளவர்களுக்குத்தான் பயன்படுகிறது; எங்களைப் போன்ற ஏழைகளுக்கு அல்ல. நாங்கள் பல முறை அரசாங்க அதிகாரிகளைச் சந்தித்து வேலை கேட்டிருக்கிறோம். அதிகாரிகள், அந்தத் திட்டம் இன்னும் இந்தப் பகுதிகளுக்குக் கொண்டுவரப்படவில்லை என்று சொல்லிவிட்டார்கள்,” என்று இங்குள்ளோர் கூறினார்கள்.

**பாலியல் கொடுமைகள்:**


இதையெல்லாம் விட மோசமாக, பதின் பருவப் பெண் குழந்தைகள் பாலியல் கொடுமைகளுக்கு உள்ளாகிறார்கள் என்று தெரிவிக்கிறார் பிரதீப் சிங். மருத்துவரான அவர் 'தி ஹிண்டு' நாளேட்டிற்கு அளித்த பேட்டியில், இங்கு கர்ப்பத்தைத் தடுப்பதற்கான மாத்திரைகள் மிக அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன என்று தெரிவித்தார். பல கருக்கலைப்புகள் தனியார் மருத்துவமனைகளில் செய்யப்படுகின்றன. ஆனால் அந்த விவரங்கள் அரசாங்கத்தின் கவனத்திற்கு வருவதே இல்லை. ஏனென்றால் இந்த மருத்துவமனைகள் பதிவு பெற்றவை அல்ல என்று அவர் கூறினார்.

இவர்களுடைய வீடுகளுக்குள் – அவற்றை வீடுகள் என்று சொல்லலாம் என்றால் – சாதாரணமாகப் பார்வையிட்டால் கூட, இவர்கள் இங்கு வாழ்வதெல்லாம் தற்காலிகமானதுதான் என்பதைக் காட்டிவிடும். பிளாஸ்டிக் பொருள்களாலும், வைக்கோலாலும் அமைக்கப்பட்டுள்ள இந்த “வீடுகள்” மிகவும் பலவீனமாக, பலத்த காற்றடித்தால் பிய்ந்து பறந்துவிடக் கூடியவையாக உள்ளன.

இந்தக் குழந்தைகளின் அவலம் பற்றி மாநில அரசு அறிந்தேவைத்திருக்கிறது. ஆனால், இவர்களது உரிமைகளை உறுதிப்படுத்த அரசு இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

“நிலைமை என்ன என்பது எங்களுக்குத் தெரியும். குற்றச்சாட்டுகளை நாங்கள் மறுப்பதற்கில்லை. இந்தக் குழந்தைகளுக்கு அடிப்படைக் கல்வியும் மருத்து வசதிகளையும் வழங்க அரசாங்கம் திட்டமிட்டு வருகிறது,” என்று கூறுகிறார் மாநில காவல்துறை தலைமை இயக்குநர் என்.வி. ராத். ❑

ஆதாரம் – **The Hindu, 5.4.2011**



www.flickr.com

# குழந்தைத் திருமணங்களை செல்லாததாக்க வலியுறுத்தல்

–கிரிஜா வியாஸ்

மும்பை: குழந்தைத் திருமண தடைச்சட்டத்தைச் செயல்படுத்துவதில் உள்ள மிகப்பெரிய குறைபாடு, குறிப்பிட்ட வயதுக்குக் கீழே உள்ளவர்களுக்குச் செய்துவைக்கப்படும் திருமணங்கள் "செல்லாதவை" என்று இருப்பதற்கு மாறாக அந்தத் திருமணங்களை "அங்கீகரிக்கப்படுகின்றன" என்பதுதான் என்று தேசிய மகளிர் ஆணைய தலைவர் கிரிஜா வியாஸ் கூறினார். மும்பையில் நடந்த குழந்தைத் திருமணங்கள் தொடர்பான கருத்தரங்கில் உரையாற்றிய அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"மேலும் (இப்படிப்பட்ட திருமணங்கள் மூலம் பிறக்கிற) குழந்தைகள் சட்டப்பூர்வமானவையாக உள்ளன. திருமணங்கள் தொடர்பான தனி மனித சட்டங்கள் வேறு உள்ளன," என்றார் அவர். ஆணையத்தின் தலைவர் பொறுப்பிலிருந்து ஓய்வு பெறுவதற்கு ஒரு வாரம் இருக்கிற நிலையில் இங்கு நடந்த கூட்டத்தில் அவர் இவ்வாறு கூறினார். குாந்தைப் பருவத்திலேயே திருமணங்கள் நடத்திவைக்கப்படுவதில் முன்னணியில் இருக்கிற மாநிலம் மத்திய பிரதேசம். அங்கே 73 சதவீத திருமணங்கள் உரிய வயதுக்குக் கீழே உள்ளவர்களிடையேதான் நடைபெறுகின்றன. இரண்டாவது இடம் ராஜஸ்தானுக்கு. அதையடுத்து பீகார், உத்தர பிரதேசம், சத்திஷ்கர், மேற்கு வங்கம், கேரளத்தில் கூட சில மாவட்டங்கள் வருகின்றன என்றார் அவர்.

பெண்களுக்கு எதிரான குற்றச்செயல்கள் அதிகரித்துவருவது குறித்து கவனத்திற்குக் கொண்டுவந்தார் கிரிஜா வியாஸ். 2005, 2009 ஆண்டுகளின் புள்ளிவிவரங்கள் பின்வரும் தகவல்களைத் தருகின்றன: வன்புணர்ச்சிக் குற்றப் புகார்கள் 2005ல் 18,349 ஆக இருந்தன, 2009ல் 22,000 ஆக அதிகரித்துவிட்டன. கடத்தல் புகார்கள் 15,000 என்பதிலிருந்து 26,000 ஆக அதிகரித்துவிட்டன. மானபங்கக் குற்றச்செயல்கள் 34,000 என்பதிலிருந்து 39,000 ஆக அதிகரித்துவிட்டன. குடும்ப வன்முறை தடுப்புச் சட்டத்தின் 498 ஏ பிரிவின் கீழ் பதிவான குற்றச்செயல்களின் எண்ணிக்கை 58,000 என்பதிலிருந்து 90,000 ஆக அதிகரித்துவிட்டன.

சட்டம் தவறாகப் பயன்படுத்தப்பட்ட சில சம்பவங்கள் நடந்துள்ளன என்றாலும் கூட, "சமத்துவமற்ற நிலைமை தொடர்கிற வரையில் 498–ஏ சட்டப்பிரிவுக்கு மாற்று இல்லை" என்று அவர் குறிப்பிட்டார்.

மாநில மகளிர் ஆணையங்கள் வலுப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார். மஹாராஷ்டிரா மாநில மகளிர் ஆணையத்திற்கு இன்னமும் உறுப்பினர்கள் நியமிக்கப்படவில்லை என்பதை அவர் சுட்டிக்காட்டினார். மாநில முதலமைச்சரோடு தாம் இது பற்றிப் பேச இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

திருமணத்திற்கான குறைந்தபட்ச வயது தொடர்பான பிரச்சனை பற்றிக் குறிப்பிட்ட அவர், "இது தொடர்பான கலந்தாலோசனைகளின்போது வட மாநிலங்கள் இந்த வயது வரம்பைக் குறைக்க வேண்டும் என்று கோரின. தென் மாநிலங்கள் இதை உயர்த்த வேண்டும் என்று விருப்பம் தெரிவித்தன. எனினும், இது 18 வயதுக்குக் குறைவாக இருக்கக்கூடாது என்பதே ஆணையத்தின் கருத்து," என்றார்.

மும்பையைச் சேர்ந்த வழக்கறிஞர் ஜெயா மேனன், திருமணங்கள் கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டும் என்றார். "குழந்தைத் திருமணங்கள் முதலில் சட்டப்படி செல்லாதவையாக அறிவிக்கப்பட வேண்டும். தனக்கு நடந்த திருமணம் செல்லாது என்று அறிவிக்கக்கோரி ஒரு குழந்தை தானேதான் நீதிமன்றத்தை அணுக வேண்டிய நிலை ஏற்படக்கூடாது. இப்போது நடப்பது அதுதான்," என்றார் அவர்.

மகப்பேறு மருத்துவர் செஜால் தேசாய், 14 வயதே ஆன பெண் குழந்தைகள் கர்ப்பமாவது அதிகரித்து வருவது பற்றியும், அதனால் அவர்களுக்கு ஏற்படும் கடுமையான உடல்நலச் சீர்கேடுகள் பற்றியும் குறிப்பிட்டார். "நாம் கிரிக்கெட் உலகக்கோப்பையை வென்றுவிட்டோம். ஆனால், பெண்களின் உடல் நலம் தொடர்பான அக்கறைகளில் நாம் இன்னும் வெகு தூரம் சென்றாக வேண்டும். 12 முதல் 15 வரையிலான பெண் குழந்தைகளிடையே நிகழும் மரணங்களுக்கு கருச்சிதைவுதான் முக்கியக் காரணமாக இருக்கிறது," என்று அவர் கூறினார்.

மும்பையில் பாலியல் தொழிலாளர்களிடையே பணியாற்றிவரும் சம்மித்ரா அறக்கட்டளை அமைப்பைச் சேர்ந்த பேராசிரியர் பிரபா தேசாய், குழந்தைத் திருமணங்களுக்கும் பாலியல் தொழிலுக்கும் உள்ள தொடர்பு பற்றிக் கூறினார். வட இந்தியாவைச் சேர்ந்த பேடியா, நாட் சமூக மக்களிடையே நடப்பது போல் இந்தியா முழுவதும் இது நடந்து வருகிறது. இத்தகைய குழந்தைகள் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். ஒரு குழந்தையை பாலியல் தொழிலில் ஈடுபடுத்துவதற்கான ஒரு சாக்காக குழந்தைத் திருமணங்கள் பயன்படுகின்றன," என்று அவர் கூறினார். மகளிர் கொள்கையில் ஒரு சிறப்பு உட்கூறு திட்டம் உருவாக்கப்பட வேண்டும்; பாலியல் தொழிலாளர்களுக்கான மாற்று வருவாய் வழிகளும் ஏற்படுத்தப்பட வேண்டும். அப்போதுதான் அவர்கள் தங்களது குழந்தைகளையாவது இதே தொழிலில் ஈடுபடுத்துவதைத் தவிர்க்க முடியும் என்றும் பிரபா தேசாய் கூறினார்.

பாரதிய பெண் வழக்கறிஞர்கள் சங்கத்தின் தலைவர் வர்ஷா கேல், பதின்பருவத்தில் உள்ள பெண் குழந்தைகளை பாலியல் தொழிலுக்கும் குழந்தைத் திருமணத்திற்கும் தயார்ப்படுத்துகிற "நாத் உதர்ணா" சடங்குக்குத் தடை விதிக்க வேண்டும் என்றார். இந்தச் சடங்கில் பங்கெடுக்குமாறு செய்யப்படுகிற பெண் குழந்தைகள் அனைவரும் 15 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களே என்று அவர் சுட்டிக்காட்டினார்.

ஆதாரம் – **The Hindu, 5.4.2011**

# ஊட்டச்சத்தின்மையும் ஐசிடிஎஸ் செயல்பாடும்

## ஐசிடிஎஸ் திட்டங்கள் பற்றிய அறிவிப்புகள், ஊட்டச்சத்தின்மை தொடர்பான உண்மை நிலவரங்களுடன் இணைந்ததாக இருக்க வேண்டும்

காங்கிரஸ் கட்சி தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு – 2 பதவியேற்றவுடன், 2009–10 நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட்டைத் தாக்கல் செய்து உரையாற்றிய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி, "நாட்டில் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாடு சேவைகள் (ஐசிடிஎஸ்) திட்டத்தை **அனைவருக்குமானதாக** (அழுத்தம் நம்முடையது) மாற்ற அரசு உறுதிபூண்டுள்ளது. 2012 மார்ச் மாத வாக்கில் ஐசிடிஎஸ் கீழ் வருகிற அனைத்து சேவைகளும், 6 வயதுக்கு உட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும், **தரத்துடன்** (அழுத்தம் நம்முடையது) விரிவுபடுத்தப்படும்," என்று கூறினார். 2012 மார்ச் வருவதற்கு இன்னும் ஓராண்டுதான் இருக்கிறது. ஆனால் ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளில் ஐந்துக்கு இரண்டு பேர் ஓரளவு முதல் கடுமையான நிலை வரையில் ஊட்டச்சத்தின்மையால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்; மூன்றிலொரு பங்கு குழந்தைகளுக்கு மூச்சுக்குழாய் அழற்சி, ரண ஜன்னி, கக்குவான் இருமல் ஆகிய மூன்றுக்குமான முத்தடுப்பு மருந்து கிடைக்கவில்லை; மூன்றில் இரண்டு பங்கு குழந்தைகள் பள்ளிக்கு முந்தைய கற்றல் (மழலையர் பள்ளி) வாய்ப்பு மறுக்கப்பட்டவர்களாக உள்ளனர்.

**இந்தியாவில் ஊட்டச்சத்தின்மை விகிதம் மிக அதிமாக இருப்பது நாட்டை வளர்ச்சியற்ற நாடுகளின் பிரிவில்தான் சேர்க்கிறது.**

இந்நிலையில், அடுத்த ஆண்டு ஏற்படக்கூடிய பலன் என்பது, இரண்டு ஆண்டுகளுக்கு முன் அமைச்சர் அறிவித்த இலக்கிலிருந்து வெகுதூரம் பின்தங்கியதாகவே இருக்கும் என்று நிச்சயமாகக் கூற முடியும். எனினும் 2011–12ம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டில் ஐசிடிஎஸ் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு 2010–11ஆம் ஆண்டின் ரூ.8,430.21 கோடி (திருத்தப்பட்ட மதிப்பீடு) என்பதிலிருந்து 9,294.19 கோடி (பட்ஜெட் மதிப்பீடு) என்ற அளவுக்கே உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்த 10.2 சதவீத உயர்வு கூட வெறும் பெயரளவுக்குத்தான்.

2009ல் இப்படி அறிவித்தபோதே நிதியமைச்சருக்குத் தெரிந்திருக்கும் – அவரது வாக்குறுதியை ஐசிடிஎஸ் திட்டத்தால் நிறைவேற்ற இயலாது என்பது. இந்த வாக்குறுதியே கூட மறக்கப்பட்டுவிடும் என்று கூட அவர் எதிர்பார்த்திருக்கக்கூடும். ஆனால், நிலைமை என்னவெனில் இந்தியாவின் ஊட்டச்சத்தின்மைப் பிரச்சனை மிக ஆழமானதாக இருக்கிறது. "இந்தியா ஒளிர்கிறது" என்பதாகக் கதைத்துக்கொண்டிருக்கும் மேல்தட்டினர் வேண்டுமானால், இந்தியா ஒரு பொருளாதார வல்லரசாகிவிட்டது என்று கூறிக்கொண்டிருக்கலாம்; ஆனால், நாட்டின் அவல நிலை சிசு மரணங்களிலும் ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் மரணங்களிலும் பிரசவ மரணங்களிலும் பிரதிபலித்துக்கொண்டுதான் இருக்கிறது. இந்தியாவில் ஊட்டச்சத்தின்மை விகிதம் மிக அதிமாக இருப்பது நாட்டை வளர்ச்சியற்ற நாடுகளின் பிரிவில்தான் சேர்க்கிறது.

அங்கன்வாடி (குழந்தை பராமரிப்பு) தொழிலாளர்களுக்கும், உதவியாளர்களுக்குமான உதவித்தொகை அதிகரிக்கப்பட்டிருப்பதை (இன்னும் போதுமானதல்ல, மிகக் குறைவானதுதான் என்றாலும்) ஏதோ பரவாயில்லை என்றுதான் கூற முடியும். ஒவ்வொரு அங்கன்வாடி மையத்திலும் உள்ள தொழிலாளியும் உதவியாளரும் ஐசிடிஎஸ் திட்டத்தின் ஒரு பகுதியாக பல்வேறு பணிகளைச் செய்தாக வேண்டியிருக்கிறது. ஆறு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கும், கர்ப்பிணிப் பெண்களுக்கும், குழந்தைகளைப் பராமரிக்கும் அன்னையருக்கும் கூடுதல் ஊட்டச்சத்து வழங்க வேண்டிய பொறுப்பு இவர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. நோய்த்தடுப்பு மற்றும் மருத்துவ சோதனைகளுக்கு இடையேயான இணைப்பாக இவர்கள் இருக்க வேண்டும். சுகாதார ஆலோசனைகளும் ஊட்டச்சத்து ஆலோசனைகளும் வழங்கியாக வேண்டும். மருத்துவ வழிகாட்டல்களுக்குப் பரிந்துரைக்கிற பணியைச் செய்தாக வேண்டும்.

முறை சாரா, பள்ளிக்கு முந்தைய கால கல்வியை வழங்கியாக வேண்டும். இந்தப் பணிகளை எல்லாம் தன்னால் முடிந்த அளவுக்குச் செய்யக்கூடிய ஒருவர் பெரும்பாலான அரசு ஊழியர்கள் செய்வதை விடவும் அதிகமாகக், கடினமாக உழைத்துக்கொண்டிருப்பார். நிச்சயமாக இவர்கள் அரசு ஊழியர்களாக, அங்கன்வாடி

தொழிலாளிகளைப் பொறுத்தவரையில் மூன்றாம் நிலை ஊழியர்களாகவும், உதவியாளர்களைப் பொறுத்தவரையில் நான்காம் நிலை ஊழியர்களாகவுமாவது அங்கீகரிக்கப்பட்டாக வேண்டும், அதற்கான தகுதி இவர்களுக்கு இருக்கிறது. இப் பெண்களுக்கு நியாயமான இந்தத் தகுதிகளை வழங்க மறுத்துவந்திருப்பதன் மூலம், அடுத்தடுத்து வந்த அரசுகள் பாலினப் பாகுபாட்டையும், வர்க்கப் பாகுபாட்டையும் உச்சநிலையில் கடைப்பிடித்து வந்திருக்கின்றன. நீதிமன்றங்களும் இதில் தலையிடவில்லை.

1975ல் ஐசிடீஎஸ் தொடங்கப்பட்டதிலிருந்து இது நாள் வரையில் 36 ஆண்டுகள் ஓடிவிட்டன. இந்த 36 ஆண்டுகளில், மக்களின் ஊட்டச்சத்து நிலையில் என்ன தாக்கம் ஏற்பட்டிருக்கிறது? இது ஒரு அமைப்பு முறை சார்ந்த பிரச்சனை என்பதால் அரசாங்கத்தின் ஒரு ஒற்றைத் திட்டத்தை மட்டும் குறைகூறிவிட முடியாதுதான். இந்தியாவில் ஏழைகளின் முகங்களிலும் முதுகுகளிலும் சுரண்டல் என்பது மிகப்பெரிதாக எழுதப்பட்டிருக்கிறது. இதைக் கண்டுபிடிப்பதற்கு நீங்கள் சரியான நிபுணத்துவத்துடன் ஒரு அறிவியலாளராக இருந்தாக வேண்டும் என்பதில்லை; உயரத்திற்கும் (மீட்டரில்) எடைக்குமான (கிலோகிராமில்) விகிதாச்சாரமாகிய உடலியல் திண்மைக் குறியீடு (பாடி மாஸ் இண்டெக்ஸ் – பீஎம்ஐ), நெடுங்காலமாகத் தொடரும் பட்டினியை உணர்த்துகிற நம்பகமான அளவுகோலாக இருக்கிறது.

1970களில் இந்திய மக்களில் கிட்டத்தட்ட பாதிப்பேர் 18.5 என்பதற்கும் குறைவாக பீஎம்ஐ இருந்தது (இது "சாதாரண" ஊட்டச்சத்து அளவீடுகளில் மிகக் குறைவானதாகும்); 2005–06ல் இது 40 சதவீத அளவுக்கே கீழிறங்கியது. பணக்காரப் பெண்களுக்குப் பிறக்கிற குழந்தைகளை விடவும், ஏழைக்குழந்தைகளுக்குப் பிறக்கிற குழந்தைகளின் எடை மிக மிகக் குறைவாக இருக்கிறது. மருந்து நிறுவனங்களால் அரசாங்கத்திற்கு மொத்தமொத்தமாக விற்கப்படப் போகிற வைட்டமின்களாலும், ஊட்டச்சத்துப் பொருள்களாலும் இந்த நிலைமையை மாற்றிவிட முடியுமா? முடியாது. ஏழைப் பெண்களும் (அவர்களது கணவர்களும்) கவுரவமான கூலிக்காகவும் சமூகப் பாதுகாப்புக்காகவும் போராடியாக வேண்டும். அதன் மூலமே அவர்களால் இயல்பான பீஎம்ஐ அளவை எட்ட முடியும்; அவர்களது குழந்தைகள் 3.2 கிலோ எடையுடன் பிறக்க முடியும்.

நிலவரம் என்னவென்றால், இப்படிப்பட்ட குழந்தைகளின் பெற்றோரும், அவர்களுக்குக் குழந்தை பராமரிப்பு சேவைகளை வழங்குகிற அங்கன்வாடி தொழிலாளிகளும் உதவியாளர்களும் தங்களது வாழ்வில் பெரும் பாரபட்சங்களை அனுபவித்து வருகிறார்கள். இவர்களது நிலைமை உயர்த்தப்பட்டால்தான் இவர்களால் குழந்தைகளுக்கு வாழ்க்கையில் ஒரு நல்ல தொடக்கத்தை ஏற்படுத்தித் தர இயலும். தாய்மார்களுக்கு தேவையான அளவுக்கு பீஎம்ஐ அமைந்தால்தான் அவர்களால் தங்கள் குழந்தைகளுக்கு முதல் ஆறு மாதங்களுக்கு தாய்ப்பால் ஊட்ட முடியும் (தற்போது மூன்றில் ஒரு சிசுவுக்குத்தான் முதல் ஆறுமாதங்களுக்குத் தொடர்ச்சியாகத் தாய்ப்பால் கிடைக்கிறது).

**ஏழைப் பெண்களும் (அவர்களது கணவர்களும்) கவுரவமான கூலிக்காகவும் சமூகப் பாதுகாப்புக்காகவும் போராடியாக வேண்டும். அதன் மூலமே அவர்களால் இயல்பான பீஎம்ஐ அளவை எட்ட முடியும்; அவர்களது குழந்தைகள் 3.2 கிலோ எடையுடன் பிறக்க முடியும்.**

அதன் பின் அந்தத் தாய்மார்கள் தங்களது குழந்தைகளுக்கு உரிய உணவளிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் ஏழைப்பெண்களுக்கு தேவையான அளவுக்கு பீஎம்ஐ இல்லை; அத்தகைய உணவுகளை வழங்கக்கூடிய நிலையில் அவர்களது குடும்பங்களும் இல்லை. பிறந்த 6வது மாதத்திலிருந்து 2வது வயது வரையில்தான் எடைக்குறைவான குழந்தைகளின் விகிதம் அதிரடியாக உயர்கிறது என்பதில் வியப்பேதும் இல்லை. வயிற்றுப்போக்கு, சுரம், நச்சுக் காய்ச்சல் போன்றவை தாக்குகிறபோது குழந்தைகளின் ஊட்டச்சத்தின்மை பிரச்சனை கடுமையான நிலவரங்களை அடைகிறது. ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் மரணம் என்பதும் அதிகரிக்கிறது. தாய்மார்கள் தங்களது வீடுகளிலிருந்து வெகுதொலைவு தள்ளிச்சென்று நீண்ட நேரம் உழைக்க வேண்டியிருக்கிற நிலையில், எவ்வித ஆதரவு ஏற்பாடுகளும் இல்லாத நிலையில், அவர்களால் மருத்துவ வசதிகளுக்கு செலவிட முடியாது என்கிற நிலையில் வேறு எத்தகைய விளைவுகளைத்தான் எதிர்பார்க்க முடியும்? இப்படியிருக்கிறபோது, ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் எடைக்குறைவாக இருப்பதில் முதல் நான்கு இடங்களைப் பிடித்துள்ள நாடுகளில் ஒன்றாக இப்போதும் இந்தியா நீடிக்கிறது என்பதில் ஏதாவது ஆச்சரியம் இருக்கிறதா?

ஆதாரம் – **எகனாமிக் அன்ட் பொலிடிகல் வீக்லி' தலையங்கம், 19.3.2011**

# சிசு மரணத்தைக் குறைப்பதற்கான இலக்கு: 2011ல் மஹாராஷ்டிரா எட்டிப்பிடிக்குமா ?

– ராஹி கெய்க்வாட்

## கிட்டத்தட்ட சிசு மரணமே இல்லை என்ற நிலையை ஏற்படுத்த 4 ஆண்டுகளுக்கு முன் அறிவுறுத்தியது உயர்நீதிமன்றம்

- **2006ல் 35 ஆக இருந்த சிசு மரண விகிதம் தற்போது 33 ஆக இருக்கிறது – இரண்டே புள்ளிகள்தான் குறைவு**

- **1998–99ல் மேற்கொள்ளப்பட்ட என்எப்எச்எஸ்–2 ஆய்வில் 53 ஆக இருந்த கிராமப்புற சிசு மரணம் இது வரையில் குறையவேயில்லை.**

மஹாராஷ்டிரா மாநிலத்தில் சிசு மரணங்கள் மிக அதிகமாக இருப்பது கண்டு கவலைகொண்ட பம்பாய் உயர்நீதிமன்றம் நான்கு ஆண்டுகளுக்கு முன், ‘‘பழங்–குடியினர் பகுதிகளிலும் பழங்குடியினர் அல்லாதோர் பகுதிகளிலும் ஊட்டச்சத்தின்மையால் மரணமடையும் குழந்தைகளின் விகிதாச்சாரத்தை 2011 செப்டம்பர் 30 வாக்கில் கிட்டத்தட்ட ஒன்றுமில்லை என்கிற அளவுக்குக் குறைக்க வேண்டும்,’’ என்று மாநில அரசுக்கு இலக்கு நிர்ணயித்து ஆணையிட்டது.

இலக்கிற்கான நாள் வருவதற்கு இன்னும் 9 மாதங்களே இருக்கின்றன. ஆனால் அந்த இலக்கிற்கு அருகாமையில் கூட இன்னும் மஹாராஷ்டிரா மாநிலம் வரவில்லை.

அதிகாரப்பூர்வ ஆவணங்களின்படி, இந்த மாநிலத்தின் சிசு மரண விகிதம் 33 ஆகும். நீதிமன்றம் மேற்படி ஆணையைப் பிறப்பித்த 2006ஆம் ஆண்டில் இருந்த 35 என்ற விகிதத்திலிருந்து 2 புள்ளி அளவுக்கு மட்டுமே குறைந்திருக்கிறது. அதே நேரத்தில், மஹாராஷ்டிராவில் 6 வயதுக்குக் கீழ்ப்பட்ட குழந்தைகளில் ஊட்டச்சத்தின்–மையால் 40 விழுக்காடு குழந்தைகள் பாதிக்கப்–படுகிறார்கள்.

ஊட்டச்சத்தின்மை தொடர்பான உயர்மட்டக் குழுவிற்கு உயர்நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டவரான டாக்டர் அபய் பேங் (சமூக நலவாழ்வு கல்வி, செயல்பாடு மற்றும் ஆய்வு நிறுவனம் – செர்ச்), தி ஹிண்டு பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், தேசிய குடும்ப நல 3–வது ஆய்வறிக்கையின்படி, மஹாராஷ்டிரா மாநிலத்தின் ஊரகப் பகுதிகளில் சிசு மரண விகிதம் 53 என்று தெரிவித்தார். ‘‘1998–1999 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 2வது தேசிய குடும்ப நல ஆய்வில் தெரியவந்த விகிதத்திலிருந்து ஒரு புள்ளி கூட குறைந்து விடவில்லை,’’ என்றார் அவர்.

15 பழங்குடிகள் மாவட்டங்களில் குழந்தை மரணங்கள் குறித்து 2006 செப்டம்பர் 20 அன்று மாநில அரசு தாக்கல் செய்த வாக்குமூலப் பத்திரத்தைப் பற்றிக் குறிப்பிட்ட நீதிபதி ஆர்.எம். லோதா, ‘‘நாடு விடுதலை பெற்று இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் கூட, இவ்வளவு பெரும் எண்ணிக்கையில் குழந்தை மரணங்கள் நிகழ்வதும், அதன்று ஊட்டச்சத்தின்மையே பெரும் காரணமாக இருப்பதும் சமுதாயத்திற்கு ஒரு இழுக்கு இல்லையயா ? ஒவ்வொரு முறையும் மாநில அரசு தாக்கல் செய்து வந்துள்ள அனைத்து வாக்குமூலப் பத்திரங்களிலும், குழந்தை மரணங்களைக் கட்டுப்படுத்த தன்னால் இயன்றதனைத்தையும் செய்துவருவதாகவும், அதற்காக நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் மாநில அரசு கூறி வந்துள்ளது. ஆனால், ஆவணப்பூர்வமாகவே தெரிய வந்துள்ள தகவல்கள் அரசின் இந்தக் கூற்றுக்கு நேர் மாறாக இருக்கின்றன,’’ என்று கூறினார், (ஆதாரம்: மனித உரிமைகள் சட்ட நெட்வொர்க்)

கடுமையான ஊட்டச்சத்தின்மையால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் சதவீதம் 2003 முதல் தொடர்ச்சியாகக் குறைந்துவருகிறது என்று மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும், 2010 ஜூன் மாதம் கொண்டுவரப்பட்ட புதிய உலக சுகாதார நிறுவனத்தின் வழிகாட்டல்களின் அடிப்படையில் பார்த்தால், ஊட்டச்சத்தின்மைப் புள்ளி விவரங்கள் மிகவும் அதிகமாக உள்ளன. உதாரணமாக, 2009–2010ல் குழந்தைகளின் எடை கணக்கிடப்பட்ட போது, மொத்தம் எடை கணக்கிடப்பட்ட 98,000 குழந்தைகளில் 0.51 சதவீதத்தினர்தான் உண்மை–யிலேயே ஊட்டச்சத்து இல்லாதவர்களாக மதிப்பிடப் பட்டது. இதை 2010 செப்டம்பருக்கான மாதாந்திர வளர்ச்சி அறிக்கையோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம்: அதன்படி, எடை கணக்கிடப்பட்ட 77,000த்துக்கும்

மேற்பட்ட குழந்தைகளில் 6.77 சதவீதத்தினர் மிக மோசமான அளவுக்கு எடைக்குறைவாக உள்ளனர்.

இந்தப் புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்ட ஒன்பது மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் இதுதான் நிலைமை. ஒவ்வொரு தனி மனிதருக்கும் தனி அடையாள எண் வழங்கும் திட்டத்தைத் தொடங்குவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டதால் வெளிச்சத்துக்கு வந்த தேம்ப்ளி கிராமம் அமைந்துள்ள பின்னடைந்த மாவட்டமான நந்தூர்பார் மாவட்டத்தில், 10.25 சதவீதம் குழந்தைகள் மிக மோசமான அளவுக்கு எடைக்குறைவானவர்கள் பிரிவைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். செப்டம்பருக்கான மாதாந்திர வளர்ச்சி அறிக்கை இதனைத் தெரிவிக்கிறது. நிலைமையை மேலும் மோசமாக்கும் வகையில் இந்த மாவட்டத்தில் குழந்தைகளின் ஊட்டச்சத்தின்மை என்பது அதிகரித்திருக்கிறது.

நந்தூர்பார் மாவட்டத்தில் ஊட்டச்சத்து குறைவான குழந்தைகளின் விகிதாச்சாரம் 2007–2008ல் 0.39 சதவீதமாக இருந்தது; இது 2009–2010ல் 0.77 சதவீதமாக அதிகரித்தது. ஓரளவுக்கு ஊட்டச்சத்து குறைவாக உள்ள குழந்தைகளின் விகிதாச்சாரமும் அதிகரித்திருக்கிறது.

மும்பை நகரின் ஒரே ஒரு குடிசைப்பகுதியில் அண்மையில் அடுத்தடுத்து நிகழ்ந்த குழந்தை மரணங்கள், குழந்தைகளின் ஊட்டச்சத்தின்மை என்பது பழங்குடியினர் மாவட்டங்களுக்கும் பின்னடைந்த மாவட்டங்களுக்கும் மட்டுமே உரிய அம்சமல்ல என்ற உண்மையை எடுத்துரைக்கின்றன.

"ஊட்டச்சத்தின்மை என்பதை பூஜ்யம் என்ற அளவுக்குக் குறைப்பது நடைமுறை சாத்தியமற்றதுதான். ஆனால் ஊட்டச்சத்தின்மையால் நிகழும் மரணங்களைப் பெரிதும் குறைக்க முடியும்," என்கிறார் பேங். அரசாங்கத்தின் சிந்தனையில் உள்ள கவலையளிக்கும் அம்சத்தை அவர் சுட்டிக்காட்டுகிறார். "சிசு மரண விகிதத்தை 30 ஆகக்குறைப்பது என்று தேசிய அளவில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், மஹாராஷ்டிரா மாநில அரசு அந்த இலக்கை 20 ஆக நிர்ணயித்திருந்தது. ஆனால், ஓராண்டுக்கு முன் நடந்த இதற்கான ஒரு குழுவின் கூட்டத்தில், இந்த இலக்கை 30 ஆக நிர்ணயித்து நீர்த்துப்போகச் செய்வது குறித்த ஆலோசனையை அரசாங்கம் முன்வைத்தது. இதற்கு நான் எதிர்ப்புத் தெரிவித்தேன். அரசாங்கத்திற்குக் கடிதம் மூலமாகவும் என் எதிர்ப்பைத் தெரிவித்தேன். ஆனால், அரசாங்கத்திடமிருந்து எனக்கு பதில் எதுவும் வரவில்லை," என்று அவர் தெரிவித்தார்.

அண்மையில் நடைபெற்ற மாநில சட்டமன்ற குளிர்கால கூட்டத்தொடரில், குழந்தைகளின் ஊட்டச்சத்தின்மையால் நிகழும் மரணங்கள் குறித்து சூடாக விவாதிக்கப்பட்டது. ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டு சேவை திட்டத்தை மிக மோசமாகச் செயல்படுத்துவது குறித்தும், ஏராளமான கமிட்டிகளை மட்டும் அமைத்துக்கொண்டே போகிற போக்கு குறித்தும் எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்தன.

அண்மையில் முதலமைச்சர் பிரித்விராஜ்சவான், மோசமாக பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் ஒன்றான அம்ராவதி மாவட்டத்தின் மேல்காட் பகுதிக்குச் சென்று பார்வையிட்டார். "செர்ச் அமைப்பின் வழியைப் பின்பற்றி, அங்கீகரிக்கப்பட்ட சமூக சுகாதார ஊழியர்களுக்குப் பயிற்சியளிக்கிற திட்டத்தை அரசு தொடங்கும் என்று உறுதியளித்தார். உண்மையிலேயே இதை எப்படி நடைமுறைப்படுத்தப் போகிறார்கள் என்பதை காலம்தான் சொல்ல வேண்டும்," என்று பேங் கூறுகிறார்.

நீதிமன்ற ஆணையை அரசு நிறைவேற்றப்போகிறதா இல்லையா என்ற கேள்விக்கும் காலம்தான் பதில் சொல்ல வேண்டும். ❑

ஆதாரம் – **The Hindu, 20.12.2010**

*Education Material Published on behalf of*

**Tamil Nadu Child Rights Protection Network by**
**Human Rights Advocacy and Research Foundation (HRF)**

*No.10, Thomas Nagar, Little Mount, Saidapet, Chennai - 600 015.*
*Ph : 044-2235 3503, Fax : 044-2235 5905, E-mail : hrf@md3.vsnl.net.in,*
*Website : humanrightsadvocacyandresearchfoundation.org*